மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii




சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 07 சனிக்கிழமை (23.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 248

## துணுக்காய், உயிலங்குளம் பகுதிகளை கைப்பற்றியதாக இராணுவம் அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்திற்கு மேற்கே உள்ள துணுக்காய் அதனை அண்டிய உயிலங்குளம் மற்றும் அக்கராயன்குளம் பிரதேசத்தின் தென் பகுதியையும் இராணுவத்தினர் நேற்று விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தளமாக விளங்கிய துணுக்காய் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக இராணுவத்தினர் கடந்த ஒரு வாரகாலமாக அந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளுடன் கடுமையாகப் போராடியதாகவும் இதற்கு உதவியாக விமானப் படையினரும் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்களை நடத்தி அவர்களுக்கு சேதங்களை ஏற்படுத்தியதாகவும் இராணுவ (12ஆம் பக்கம் பார்க்க)

## தேவாலயம் ஒன்றிலிருந்து வெடிகுண்டு சாதனம் மீட்பு

(கொழும்பு)

இலங்கையின் தலைநகர் கொழும்பின் புறக்கோட்டை பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றிலிருந்து தற்கொலை அங்கிக்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் மற்றும் இலத்திரனியல் சாதனங்களைக் கண்டுபிடித்திருப்பதாக கொழும்பு பொலிசார் தெரிவித்திருக்கின்றனர்.

கொழும்பு புறக்கோட்டை ஓல்கோட் மாவத்தையில் (12ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் இடம்பெறும் மோதலால் 69 மனிதாபிமானப் பணிகள் பாதிப்பு

## ஐ.நா. கவலை

(கொழும்பு)

வடக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட 69 மனிதாபிமான மீள் புனருத்தாரண செயற்றிட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் முன் நகர்வு முறியடிப்பு 5 படையினர் பலி; 7 பேர் படுகாயம்

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வவுனியாவில் பாலமோட்டை குஞ்சுக்குளம் பகுதி ஊடாக படையினர் மேற்கொண்ட முன் நகர்வு முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஏழு பேர் காயமடைந்துள்ளனர். படைத்தரப்பைச் சேர்ந்தவரின் சடலம் உட்பட படைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

பாலமோட்டை குஞ்சுக்குளம் ஊடாக நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் படையினர் ஆட்லெறி எறிகணை பல்குழல் வெடிகணை மற்றும் எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்தியின் (12ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடுப் பகுதியில் விமானப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பொதுமகன் ஒருவன் உயிரிழந்தார்.

விசுவமடு மேற்குப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று காலை 9.50 மணியளவில் விமானப் படை விமானங்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டன.

இதில் மூன்று வீடுகள் சேதமடைந்தன. சிற்றூர்தி ஒன்றும் கடும் சேதங்களுக்குள்ளாகியது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகேசு இராவணேஸ்வரன் (வயது 32) என்பவர் சம்பவ (12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஒழிப்பதன் மூலமே நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்படும்

### அமைச்சர் நிமால் நாடாளுமன்றில் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று வெளிநாடுகளிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த நாங்கள் முயற்சிக்கவில்லை.

பயங்கரவாதத்தை ஒழித்து அவற்றின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தவே நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் கைது செய்யப்படும் நாள் தொலைவில் இல்லை எனத் தெரிவித்த அமைச்சர் பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கு அரசாங்கம் முழு நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருப்பதாக கூறினார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் செயற்படுவதாலும், தேசிய பாதுகாப்புக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென நாட்டு மக்களும் விரும்புவதாலும் சப்ரகமுவ மற்றும் (12ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு மாகாண பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டி

## 17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியன்

(வவுனியா)

வட மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

இதன் மூலம் நீண்டகால இடைவெளிக்குப் பின் யாழ்.மாவட்ட பாடசாலை அணி உதைபந்தாட்டத்தில் சம்பியனாகியுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் வவுனியாவில் ஆரம்பமானது.

இதில் நேற்று நடைபெற்ற 17 வயதுக் குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மன்னார் (12ஆம் பக்கம் பார்க்க)

## வலைபந்தாட்டப் போட்டிகளில் யாழ்ப்பாண அணிகள் சம்பியன்

(வவுனியா)

வடக்கு மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடந்த வலைபந்தாட்டப் போட்டியில் 17 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் 15,19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவுகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளும் சம்பியனாகின.

இதில் 17 வயதுப் பிரிவில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பெற்றது. வவுனியாவில் நடைபெற்றுவரும் வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் நேற்று நடைபெற்ற வலைபந்தாட்ட 15 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் வவுனியா றம்பைக்குளம் பெண்கள் பாடசாலையை (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழாக் கண்ட பேராசிரியர் கனகரத்தினம் ஆய்வியல்புலத்தின் நுண்ணிய சிந்தனையாளர்

இணைப் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினத்தின் இந்துநாகரிகப் பணி மேலும் மேலும் வளர்ந்து புகழ்பெற்ற பேராசிரியராக அவர் உருவாக வேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் இந்துநாகரிகத் துறை ஆசிரியராகக் கடந்த கால் நூற்றாண்டு காலத்துக்கு மேல் பணியாற்றி வருகின்றார்.

அவர் பேராதனைக்கு வந்து சேர்ந்த போது தமிழ்த்துறைத் தலைவராக அங்கே கடமையாற்றிய எமக்கு அவரைத் தெரிய வந்தது.

காலப் போக்கிலே அவருடைய பணிகளை அவதானித்து வந்துள்ளேன். அவருடைய ஆக்கங்கள் அனைவற்றையும் ஒருங்கு சேரப் பார்க்கும் வாய்ப்பு அண்மையில் எனக்குக் கிடைத்தது.

எண்ணிக்கையில் மட்டுமல்ல தரத்திலும் அவருடைய பணிகள் உயர்ந்து உயர்ந்து செல்கின்றன. எல்லாரையும் போல அவரும் கட்டுரைகள், நூல்கள் எழுதுகின்றார். ஆனால் அவருடைய கட்டுரைகள் பல அவர் எவ்வளவு முயற்சிகளின் பின் அவற்றை எழுதியிருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்துவன.

வன்னி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலே அவர் செய்துள்ள கள ஆய்வு அவருடைய கட்டுரைகள் சிலவற்றின் தரத்தினை உயர்த்தியுள்ளது.

தற்போது நிலவும் போர்க் கால கட்டத்திலும் இத்தகைய கள ஆய்வு நிகழ்த்தியமை சிறப்பாகப் பாராட்டத் தக்கது. நுணுக்கமாக விபரங்களைச் சேகரித்து அவையாவற்றையும் வெளிக்கொண்டு வருவது அவருடைய இன்னொரு சிறப்பியல்பு.

அவருடைய ஆய்வு முடிபுகளிலிருந்து வேறுபடுபவரும், பயன்படுத்தக் கூடிய விபரங்கள் அவருடைய வெளியீடுகளிலே காணலாம். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் காலாண்டுச் சஞ்சிகையாகிய 'தமிழியலில்' அவர் சில கட்டுரைகளை வெளியிட்டிருப்பது அக் கட்டுரைகள் தரமானவை என்பதைக் காட்டுவது மட்டுமன்றி அவை உலகத்தின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள அறிஞர்களும் பயன்பெறவும் பயன்படுத்தவும் வழி அமைத்துக் கொடுத்துள்ளது.

கனகரத்தினம் பல வகை நூல்களின் ஆசிரியராகவுள்ளார். நுண்ணாய்வாக அமைந்துள்ள அவருடைய நூல்களுள் சில சிந்தனையைத் தூண்டுவன. வேறு சில நூல்களைத் தொகுத்துள்ளார்.

கிடைத்தற்கரிய சில நூல்களை மறுபதிப்புச் செய்துள்ளார். பிற ஆய்வாளர்கள் பயன்படுத்தக் கூடிய அரிய தகவல்களும் மேன்மேலும் ஆராயக் கூடிய கருத்துக்களும் அவருடைய வெளியீடுகளிலே ஆங்காங்கே காணப்படுகின்றன.

அவர் இதுவரையாற்றியுள்ள பணிகள் அவரைப் பாராட்டிக் கௌரவிப்பதற்குப் போதியவை. அவர் பேராசிரியாக இருப்பது பல்கலைக்கழகத்துக்கு சிறப்பு. அவர் செய்து வருகின்ற பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

இந்துநாகரிகம் பரந்து விரிந்த துறை. தமிழ்நாடு, தென்னிந்தியா, வடஇந்தியா என்பவற்றோடு ஈழத் தமிழர்களின் சைவத் தமிழ் பாரம்பரியம் இணைந்தும், பிணைந்தும், வேறுபட்டும் காணப்படுகின்றது.

அவற்றைப் பற்றியும் அவர் ஆராய்ந்து வெளிக்கொணர வேண்டும். மணி விழாக் காணும்போது இணைப் பேராசிரியர் என்ற பதவியிலிருக்கும் கனகரத்தினம் இணையற்ற பேராசிரியர் என்று எதிர்காலம் போற்றத் தக்கவராகப் பணிகள் ஆற்றிவர என்னுடைய வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை**
**கலாநிதி (இலங்.), கலாநிதி (ஒக்ஸ்போட்),**

## உடற்பயிற்சிப் போட்டி இன்று

(வவுனியா)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இன்று நடைபெறும் உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்டத்திலிருந்து மானிப்பாய் மகளிர் கல்லூரியும் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆகியனவும் பங்குபெற்றுகின்றன. (ச–5)

## பகிரங்க ஏல விற்பனை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள ஒரு க்ண்ணாடி இழை வள்ளம் மற்றும் 'செய்யது' பீடி அடங்கிய முப்பது பொதிகள் என்பவற்றை விற்பனை செய்வதற்காக, எதிர்வரும் 25ஆம் திகதி யாழ்.செயலக வளாகத்தில் நடைபெறவிருந்த பகிரங்க ஏல விற்பனை பிற்போடப்பட்டுள்ளது. இவ் ஏல விற்பனை பற்றிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (ச)

## கொக்குவில் இந்துவில் முகாமைத்துவச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு ஒன்று நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் அ.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (ச)

# புதல்விகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு இருபது வருட சிறைத் தண்டனை

(வவுனியா)

சிறுமிகளான தனது இரண்டு புதல்விகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாகத் தந்தை ஒருவருக்கு எதிராகச் சட்ட மாஅதிபர் திணைக்களத்தினால் இரண்டு குற்றங்கள் சுமத்தப்பட்டுத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் திருகோணமலை மேல் நீதிமன்றம் எதிரிக்கு 20 வருட கடும் காவல் சிறைத் தண்டனை வழங்கி நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

மனைவி வெளிநாடு ஒன்றிற்குத் தொழிலுக்காகச் சென்றிருந்த வேளை தனது பாதுகாப்பிலிருந்த இரண்டு சிறுமிகளை இரவு நேரத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாக சேருவில தெஹிவத்தைப் பகுதியைச் சேர்ந்த டி.எச்.சந்திரசிறி என்பவருக்கு எதிராகத் திருகோணமலை மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த 2000–2001 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சகோதரிகளில் ஒருவருக்குச் சம்பவ நேரத்தில் வயது –13 மற்றவருக்கு வயது–11.

சட்ட மாஅதிபரின் பிரதிநிதியும் சட்டவாதியுமாகிய செல்வி சுகந்தி கந்தசாமி சாட்சிகளை நெறிப்படுத்தினார். பாதிக்கப்பட்ட சிறுமிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில்,

தாயார் வெளிநாடு சென்றிருந்ததனால் தாங்கள் தந்தையாரின் பாதுகாப்பில் வளர்ந்து வந்ததாகவும் ஒரு நாள் இரவு தந்தையார் தன்னைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாகவும் மூத்த சகோதரி தெரிவித்துள்ளார்.

இளைய சகோதரி நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில், தான் நித்திரையில் இருந்தபோது தந்தையார் தன்னைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கியதாகவும் திடுக்கிட்டு விழித்தெழுந்து தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சியைக் கொளுத்திப் பார்த்தபோது தனது தந்தையே தன் மீது பாலியல் குற்றம் புரிந்தவர் என்பதை அடையாளம் கண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தாங்கள் படித்து வந்த பாடசாலையில் சிறிது காலத்தின் பின்னர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் நடத்தப்பட்ட அறிவூட்டல் கருத்தரங்கில் தமது தந்தையார் தங்களுக்கு ஏற்படுத்திய பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக அதிகாரிகளிடம் கூறியதாகவும் அதனையடுத்து அந்த விடயம் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கையில் பாதிக்கப்பட்ட சகோதரிகள் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் முடிபில் தந்தையாரினால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஷ்பிரயோகம் பற்றி காலதாமதமாகவே பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்தாலும் அந்த முறைப்பாடு நியாயமானது என மேல் நீதிமன்றம் கருதுவதாக நீதிபதி எம்.இளஞ்செழியன் கூறியுள்ளார்.

தந்தையாரினால் பாதிக்கப்பட்ட சிறுமிகள் அவருடைய பராமரிப்பில் இருந்ததனால் அவரால் தமக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக் குறித்து அவரை மேவி வெளியில் சொல்ல முடியாத நிலையில் இருந்ததாகவும் எனவே தமக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் தமக்கு ஏற்பட்ட பாலியல் ரீதியான பாதிப்புக் குறித்துச் செய்த முறைப்பாடு நியாயமான காலதாமத முறைப்பாடே என மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் இந்திய உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு ஒன்றினை எடுத்துக் காட்டி பாதிக்கப்பட்ட பெண்களோ சிறுமிகளோ எமது சமூகத்தில் தமக்கு ஏற்படும் பாலியல் பாதிப்புக்கள் குறித்து வெளிப்படையாகக் கூறுவதற்கு முன்வருவதில்லை என்றும் அவர்கள் பொதுவாகவே தமது வாழ்க்கைத் துணையைத் தேடுகின்ற எதிர்காலம் குறித்து அச்சமடைந்திருப்பார்கள் என்றும் நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் சம்பவம் நடைபெற்ற போது சிறுமிகளாக இருந்தவர்கள் இப்போது இளங் குமரிகளாக இருக்கின்றார்கள். இந்தப் பின்னணியில் தந்தையாரினால் தமக்கு ஏற்பட்ட பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் குறித்து இவர்கள் சாட்சியமளித்துள்ளார்கள்.

எமது சமுதாயத்தில் பெண்களுக்கு இருக்கின்ற கலாசாரக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிகோரி நீதிமன்றத்திற்கு வரும்போது பூதக் கண்ணாடி வைத்து சாட்சியங்களைப் பரிசோதனை செய்ய வேண்டிய தேவை இல்லை என்ற பாலியல் வழக்குத் தொடர்பாக இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எடுகோள் காட்டி குழந்தைகளின் காவல் தெய்வமாக இருக்க வேண்டிய தந்தையொருவர் வேட்டை நாயைப் போல தனது புதல்விகளையே தனது பாலியல் இச்சைக்கு உட்படுத்தியமை அவர்களின் எதிர்கால வாழ்க்கையை நாசம் செய்த ஒரு செயலாகும்.

எனவே இந்த வழக்கின் எதிரியாகிய தந்தைக்கு கருணை, தயவு, தாட்சணியமின்றி தண்டனை வழங்குவதே சாலப் பொருத்தமாகும் என நீதிபதி தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். 13 வயதே நிரம்பிய மூத்த மகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்காக 10 வருட கடும் காவல் சிறைத் தண்டனையும் இளைய மகளாகிய 11 வயது நிரம்பிய சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்தமைக்காக 10 வருட கடும் காவல் சிறைத் தண்டனையுமாக மொத்தமாக 20 வருட கடும் காவல் தண்டனை வழங்கி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

அத்துடன் எதிரி 10 ஆயிரம் ரூபாய் தண்டமாகச் செலுத்த வேண்டும் எனவும் அதனைச் செலுத்தத் தவறினால் 2 மாதக் கடும் காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிபதி எம்.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார். (எ–5)



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு திருநெறிய தமிழ்மறைக் கழகம் அண்மையில் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி 4 ஆம் ஆண்டு மாணவியான செல்வி அபிராமி கனகசபை முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். அந் நிகழ்வில் அவர் பாடுவதையும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க.தேவராஜா, வரலாற்றுத்துறை பேராசிரியர் சத்தியசீலன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# பருத்தித்துறை பஸ் நிலையம் தெருமூடிப் பகுதிக்கு மாற்றம்

பருத்தித்துறை நகரப் பகுதியிலுள்ள பஸ் நிலையம் இன்றுமுதல் பருத்தித்துறை சிவன் கோவிலுக்கு வடக்குப் புறமாகவுள்ள தெருமூடிப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படுவதாகப் பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் அ.நடராஜா அறிவித்துள்ளார்.

தற்போதைய பஸ் நிலையம் அமைந்துள்ள இடத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் கரையோர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 மில்லியன் ரூபாய் நிதியில் நவீன மாடிக் கட்டடத்துடன் கூடிய சந்தை அமைக்கப்படவுள்ளதாலேயே பஸ் நிலையம் இடமாற்றப்படுவதாக நகர சபைச் செயலாளர் தெரிவித்தார்.

நவீன சந்தைக் கட்டடம் பூர்த்தியடைந்ததும் தற்போது சந்தைத் தொகுதி இயங்கும் பகுதிக்கு பஸ் நிலையம் மாற்றப்படலாம் என்று அவர் கூறினார். (ச–52)




அளவெட்டி நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம்
15.08.2008 - 26.08.2008

24.08.2008 – தேர்த் திருவிழா – வசந்தமண்டபப் பூஜை – மு.ப. 10.00 மணி, தேரில் எழுந்தருளல் – மு.ப. 11.00 மணி
– உறியடி – மாலை 6.30 மணி
25.08.2008 – ஸ்ரீரங்கநாதர் பாத பூஜை – மு.ப.9.00 மணி, தீர்த்தம் – மு.ப. 11.00 மணி
26.08.2008 – திருக்கல்யாணம் – பி.ப. 3.00 மணி

மேற்படி மஹோற்சவத்தில் அன்பர்கள் அனைவரும் வந்து தரிசனை செய்து, நாகவரத நாராயணரின் திருவருளால் சுகவாழ்வு பெறுமாறு வேண்டுகின்றோம்.

பொ.ப.சபை
நாகேஸ்வரம், அளவெட்டி (162)

# இன்று ஒரு தகவல்

## இதமும் பிரியமும்

இதமாகப் பேசுவதற்கும் பிரியமாகப் பேசுவதற்கும் வித்தியாசம் உண்டா? என்று கேட்டால் ''உண்டு'' என்கிறார்கள் பெரியவர்கள்.

பிரியமாகப் பேசுபவர்கள் பலபேர் இருப்பார்கள். ஆனால் இதமாகச் சொல்பவர்கள் சிலபேர் தான் இருப்பார்கள். இப்பொழுது நான் உங்களிடம் பேசுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

''உங்களுக்கு கேட்பதற்கு எது இன்பமாக இருக்குமோ'' அதாவது உங்களுக்கு எதைச் சொன்னால் பிடிக்குமோ அதைச் சொல்வது பிரியம்!

உங்களுக்கு எதைச் சொன்னால் நன்மையோ அதைச் சொல்வது இதம்! நாம் இதமாகப் பேசினாலும், பிரியமாகப் பேசினாலும் அதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை. ஆனால் ஒரு பெரிய பொறுப்பில் உள்ளவர்கள்... அதாவது ராஜா என்று வைத்துக் கொண்டால் அவருக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அமைச்சர்கள் அல்லது அதிகாரிகள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? இதமாகச் சொல்பவர்களாக இருக்க வேண்டும். பிரியமாக மட்டும் பேசுபவர்களாக இருந்துவிடக் கூடாது!

ஒரு அரசனிடம் பேசும் போது அவனுக்கு எது நன்மையோ அதைச் சொல்லவேண்டும். ஆனால் அரசனுக்கு என்ன பிடிக்குமோ அதைப் பேசுபவர்கள் தான் அதிகம். ஏன் அப்படிப் பேசுகிறீர்கள்? என்று கேட்டால் ''அப்படிப் பேசினால் தான் அவர் எங்களின் சம்பளத்தை உயர்த்துவார்!'' என்று சொல்வார்கள்.

''இதம்'' என்பது பலசமயங்களில் கசப்பாகத்தான் இருக்கும். அதனால் அதைச் சொல்பவர்களை யாருக்கும் பிடிக்காது. அதனால் தான் விபீஷணனை இராவணனுக்குப் பிடிக்காமல் போயிற்று! ஒரு நாள் இராவணன் தனது அமைச்சர்களையெல்லாம் கூப்பிட்டு, யோசனை கேட்டான்.

''வெற்றிக்கு'' மூல காரணம் அமைச்சர்களின் நல்ல ஆலோசனை என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் எனக்கு நல்ல ஆலோசனை சொல்லுங்கள்! என்று கேட்கிறான். ஆனால் அவர்கள் இராவணனுக்கு எதைச் சொன்னால் பிடிக்குமோ அதைச் சொன்னார்கள்.

''சீதையை நீயே வைத்துக்கொள்... இராமனை நாங்கள் கொன்று விடுகிறோம்!'' என்றார்கள்.

ஆனால் விபீஷணனோ, ''தனியாக நின்று இராமனை நாம் ஜெயிக்க முடியுமா? அதனால் சீதையைத் திருப்பிக்கொடுத்து விட்டு மன்னிப்புக்கேள்!'' என்றான்.

இந்த இதம் இராவணனுக்கு கசப்பாக இருந்தது. விபீஷணன் சொன்ன வார்த்தைகள் இராவணனிடம் எடுபடவில்லை

''புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்று!'' இந்தக் காதால் வாங்கி அந்தக் காதால் விட்டுவிட்டான். அதனால் தான் அழிந்தான்.

நம்மிடம் யாராவது வந்து ஒரு யோசனை சொன்னால் கூட அந்த யோசனைக்குப் பின்னால் இருப்பது பிரியமா? இதமா? என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல யோசனை, அதேசமயம் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் கூட அதை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது!

ஒரு ராஜாவுக்கு பிரியமாகவும் இதமாகவும் பேசக்கூடிய அமைச்சர் ஒருவர் இருந்தார்.

ஒரு நாள் எதிரி நாட்டு அரசன் வந்து ராணியைத் தூக்கிக்கொண்டு போய் விட்டான். அதாவது சிறை எடுத்துக் கொண்டு போய்விட்டான். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட அமைச்சர் ''அரசே! அந்திய நாட்டு மன்னன் இங்கு வந்து அரசியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான். இப்ப என் செய்யலாம்?'' என்று கேட்டார்.

''உடனே அந்த மன்னன் எங்கிருந்தாலும் கண்டு பிடித்துக் கொண்டு வாருங்கள்!'' என்றார் ராஜா. ''ஏன்?'' என்று கேட்டார் அமைச்சர்.

''அவனுக்குப் பாராட்டு விழா நடத்தி பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு கொடுத்து அனுப்ப வேண்டும்.'' என்றாராம் ராஜா.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# பொதுமக்களுக்கு வலுக்கட்டாயமாகவே புலிகள் பயிற்சி வழங்குகின்றனர்

## இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்காரா

(கொழும்பு)

விடுவிக்கப்படாத பிரதேசங்



களிலுள்ள பொதுமக்களுக்கு அவர்களின் விருப்புக்குமாறாக விடுதலைப்புலிகள் பல வந்தமாக ஆயுதப் பயிற்சி வழங்குவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைபுலிகள் தமது கட்டுப்பாட்டுப்பகுதிகளில் சிறுவர்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட சகல வயதினரையும் வலுக்கட்டாயமாக படையில் சேர்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள பொது மக்களுக்கு மக்கள் படை எனும் பெயரில் முதற்கட்ட ஆயுதப் பயிற்சிகளை வழங் கிவருவதாக பல்வேறு இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இச் செய்திகள் தொடர்பிலேயே இராணுவப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் வெற்றிகரமான முன்னேற்றம் காரணமாக விடுதலைப்புலிகள் தினமும் அதிகமான தமது உறுப்பினர் களை இழந்து வருகின்றனர். இதன் காரணமாக அவர்களுக்கு ஆட்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது எனவும் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் இராணுவத்தினருக்கெதிரான போரில் பொது மக்களைப் பயன்படுத்தினால் பொதுமக்கள் பாரிய அபாயத்துகுள் தள்ளப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க உத்தி யோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள், வர்த்தகர்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அதி காரிகள் என சுமார் 1000பேருக்கு முதற்கட்ட பயிற்சிகள் வழங்கப்படு வதாக அந்த இணையத்தள செய் திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## கனடாவில் தீவிபத்தில் இலங்கைப் பெண் மரணம்

கனடாவின் ஸ்காபுறோ என்ற இடத்தில் வசித்து வந்த 93 வயதான இலங்கை தமிழ் பெண் ஒருவர் தீவிபத்து ஒன்றில் பலியாகி உள்ளார். இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை ஆன அவர் வீட்டில் ஏற்பட்ட தீவிபத்தின் போதே உயிர் இழந்ததாக கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் தனது வீட்டில் தனித்திருந்தபோது இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. தீ அனைப்புப் படையினர் மரணமானவரின் பெயரை வெளியிடாத போதும் அவரின் மகளைக் கோடிட்டு இறந்தவரின் குடும்பப் பெயர் அழகேந்திரா என தெரிவித்துள்ளனர்.

கனடாவின் ஸ்காபுறோப் பிரதேசத்தில் 2006-2008ஆம் ஆண்டுகளில் மாத்திரம் இந்த சம்பவத்துடன் சேர்த்து 13 விபத்து சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (ஓ-6)

## இராசி பலன்

23.08.2008
(ஆவணி 07 சனிக்கிழமை)
ஸப்தமி முன்னிரவு 06.29 மணிவரை
பரணி பிற்பகல் 12.13 மணிவரை
இராகுகாலம்-09.05-10.35மணிவரை
சுபநேரம்-03.05-04.35 மணிவரை
கார்த்திகை விரதம்
நல்லூர் கந்தசுவாமி கார்த்திகை உற்சவம்

| | |
|---|---|
| மேடம் | கடினவார்த்தை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, குடும்பக்கவலை. |
| இடபம் | புதிய முயற்சி, திடீர் நன்மை, தெய்வசிந்தை, நல்ல வரவேற்பு. |
| மிதுனம் | அதிகாரிகள் சந்திப்பு, சுப செலவு, முயற்சி கைகூடும், பிரயாணம். |
| கடகம் | சகோதரர் உதவி, கீர்த்தி, காரிய அனுகூலம், தெய்வ நம்பிக்கை. |
| சிங்கம் | உற்சாகம், எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை, பிற்ர் உதவி. |
| கன்னி | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, முயற்சி த்தாமதம், பெரியோர் உதவி. |
| துலாம் | மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை, ஆரோக்கியக் குறைவு, திடீர் நன்மை. |
| விருச்சிகம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | மனமகிழ்ச்சி, நல்ல காரியம், அதிகாரம், போசனசுகம். |
| மகரம் | புத்திரரால் கவலை, காரிய தாமதம், திடீர் நன்மை, ரோகநிலை. |
| கும்பம் | சுபசெலவு, காரிய இடையூறு, புதிய விடயம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, பிறர்உதவி, குடும்பசுகம். |

வளவன்

## வலிவடக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

வலி வடக்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு,

**ஆரோக்கியமானதாய்:-** திருமதி பாஸ்கரன் சரிதா-பத்துப் பனையடி.

**ஆரோக்கியமானசேய்:-** செல்வி.பா. ரக்சாயினி-அளவெட்டி.

**சுத்தமாக இயங்கும் வெதுப் பகம்:-** காங்கேயன் வெதுப்பகம்-மல்லாகம்.

**சுத்தமாக இயங்கும் உணவகம்:-** விநாயகர் சைவ உணவகம் அளவட்டி மத்தி.

**சுத்தமாக இயங்கும் தேநீர் சாலை:-** பிரபா தேநீரகம்- அளவெட்டி .

**சுத்தமாக இயங்கும் ஐஸ்கிறீம் கடை:-** ஸ்ரீகாளி ஐஸ்கிறீம் கடை-மல்லாகம்.

**புலமைப்பரிசில் பரீட்சை:-** 2007:-க.தனுஷிகா164-அருணோதயாக் கல்லூரி, தே. கோகுலன் 162- மகாஜனாக் கல்லூரி, இ.இனோசா 161-அருணோதயாக் கல்லூரி.

**க.பொ.த.(சா/த) 2007-** க.கபிர்த்தனா- 10A யூனியன் கல்லூரி, அ.லிதர்சினி- 9A B அருணோ தயாக்கல்லூரி, வி. கோகுலன் - 8A 2B யூனியன் கல்லூரி.

**பாலர் பாடசாலை-கலை விழா:-** 1ஆம் இடம் -ஈஸ்வரன் முன்பள்ளி அளவெட்டி, 2ஆம் இடம்:- கும்பிளாவளை முன்பள்ளி அளவெட்டி, 3ஆம் இடம்:- முற்போக்கு முன்பள்ளி அள வெட்டி

**உள்ளூராட்சி சேவையில் 25 வருட சேவையை இவ் வருடம் பூர்த்தி செய்த வலிவடக்கு பிரதேச சபை அலுவலர்களும் தொழிலாளர்களும்:-**

இ. அருணகிரி-செயலாளர், திருமதி. தி.உருக்குமணி தேவி முகாமை உதவி யாளர் II, திருமதி கோ.சிவபாக்கியம் நூலகர் III, திருமதி க.இரட்ணேஸ்வரி நூலகர் III, ச. யேசுதாசன் -சுகாதாரத் தொழிலாளி, கா.ஆனந்தராசா-சுகாதாரத் தொழிலாளி, கா. ஆனந்தராசா சுகாதாரத் தொழிலாளி,

க.செல்வராசா-சுகாதார மேற்பார்வையாளர், வே.இராசேந்திரன்-வீதித் தொழிலாளி, சு. இராசரத்தினம் சுகாதாரத் தொழிலாளி

**சிறந்த சனசமூக நிலையம்-** 1ஆம் இடம்:- மகாஜன சனசமூக நிலையம்- அளவெட்டி, 2ஆம் இடம்:- கலைவாணி சனசமூக நிலையம் - அள வெட்டி, 3ஆம் இடம்:- சன்மார்க்க சனசமூக நிலையம் மல் லாகம்.

## மகளின் கருவைச் சுமந்து குழந்தை பெற்ற 61 வயது தாய்

(டோக்கியோ)

ஜப்பானில் 61 வயது பெண் குழந்தை பெற்றுள்ளார். தனது மகளின் கருவை சுமந்து இவர் குழந்தை பெற்றுக் கொடுத்துள்ளார். ஜப்பானில் இன்னொருவர் கருவை சுமந்து குழந்தை பெற்றுத் தருவது சட்டப்படி தடை செய்யப்படவில்லை. ஆனால் ஜப்பான் மகளிர் மற்றும் மகப்பேறு அமைப்பு இதை எதிர்த்து வருகிறது. ஜப்பானை சேர்ந்த ஒரு பெண்ணுக்கு கர்ப்பப்பை இல்லை இதனால் அவரால் குழந்தை பெற்றுக் கொள்ளமுடியவில்லை.

செயற்கை கருவூட்டல் முறையில் இன்னொரு பெண் மூலம் குழந்தை பெற முடியும் இதற்கு அந்த பெண்ணின் 61வயது தாய் முன் வந்தார். அந்த தாயின் கர்ப்பப்பை ஆரோக்கியமாக இருந்தது பரிசோதனையில் கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து கர்ப்பப்பை இல்லாத பெண்ணின் கரு முட்டையும் அவரது கணவரின் உயிரணுவும் இணைத்து செயற்கை முறையில் கரு உரு வாக்கப்பட்டது.

இந்தக் கரு கர்ப்பப்பை இல்லாத பெண்ணின் தாயின் கர்ப்பப்பையில் வைக்கப்பட்டது. கரு நன்கு வளர்ச்சியடைந்துவந்த நிலையில் அந்தப் பெண் தற்போது குழந்தை பெற்றுள்ளார்

ஜப்பானிலேயே மிக அதிக வயதில் இன்னொரு பெண் ணின் கருவை சுமந்து குழந்தை பெற்றுக் கொடுத்திருப்பது இவராகத்தான் இருக்க முடியும் என்று டாக்டர்கள் கூறினர். (ஓ-6)

## தாச்சி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13 ஆவது தாச்சிச் சுற்றுப் போட்டியில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு சாவக்காடு மகாத்மா விளையாட்டுக் கழகம் எதிர் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும், 4.30 மணிக்கு கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.


நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அளவெட்டி -பாரதி விளையாட்டு க்கழகம் எதிர் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ஓ)

## நூல் அறிமுகவிழா

சு.ஸ்ரீகுமரன் எழுதிய ''செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்'' நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை சுன்னாகம் பொதுநூலக நூலகர் க.சௌந்தராஜன், அறி முகவுரையை கொக்குவில் இந்துக் கல்லூரி இளைப்பாறிய அதிபர் பொ.கமலநாதன், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, மதிப்பீட்டுரையை எழுத்தாளர் ந.சத்தியபாலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

முதற்பிரதியை சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ந. சண்முகவேல் (ஜே.பி) பெற்றுக்கொள்வார். (ஓ-6)




# கணிதக் கணித்தல் திறன்களை மேம்படுத்தும் புத்தகங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஜெய்க்கா (JICA) செயற்றிட்ட அமுலாக்கத்தின் கீழ் யாழ்.கல்வி வலய அனைத்துப் பாடசாலைக்கும் கணிதக் கணித்தல் திறன்களை மேம்படுத்தும் (IMaCS) புத்தகங்கள் வழங்கல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

அன்று காலை 9மணிக்கு கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கும்,11 மணிக்கு நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கும், பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கும் புத்தகங்கள் வழங்கப்படும்.

மேற்படி புத்தகங்கள் வழங்குவதுடன் அமுலாக்கம் பற்றிய விளக்கமும், திறந்த வகுப்பு (Open Class) பற்றிய விளக்கமும் வழங்கப்படவுள்ளதால் யாழ்.கல்வி வலய அனைத்துப் பாடசாலை அதிபரும் கணித ஆசிரியர் ஒருவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ச)

# சுதேச மருத்துவத்துறை அபிவிருத்தி வேலைப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சுதேச மருத்துவத் துறையினை அபிவிருத்தி செய்து மேம்படுத்தல் தொடர்பான சுதேச மருத்துவ வேலைப் பட்டறை எதிர்வரும்25.26. 27ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாவட்டச்செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாகாணபிரதம செயல ளர் சி.ரங்கராஜா,அரசாங்க அதிபர் கே.கணேஷ்,மாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் த. இராசநாயகம்,மாகாண சுகாதார சுதேச வைத்திய செயலாளர் வைத்திய கலாநிதி ச.குமாரவேற்பிள்ளை, மாகாண சுதேச மருத்துவ பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சி.துரைரட்ணம், உள்ளூராட்சி ஆணையாளர் F.ஜோன்சன், பேராசியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் பல்கலைக் கழக சித்த மருத்துவத் துறைதலைவர் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட துறை சார்ந்த வல்லுநர்கள் இதில் பங்குபற்ற உள்ளனர்.

மேற்படி வேலைப் பட்டறையின் நிகழ்ச்சி நிரலானது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அழைக்கப்பட்ட அனைவரையும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண வைத்தியத் துறை பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ)

## மாவட்ட கலை இலக்கிய விழா சம்பந்தமான உபகுழுக் கூட்டம்

மாவட்ட கலை இலக்கிய விழா சம்பந்தமான உப குழுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறஉள்ளது.

இக் கூட்டத்தில் விழாவிற்கான இணைப்பாளர்கள், செயலாளர்கள் மற்றும் கலைஞர் விபரத் திரட்டிற்கான குழு உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி அறிவித்துள்ளார். (ஓ)





இலங்கை வங்கியின் 69ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு வங்கி ஊழியர் ரி.சஜீவன் இரத்தானம் வழங்குவதையும். வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் தலைமையில் வங்கி ஊழியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிரமதானப் பணியில் ஈடுபடுவதையும் படத்தில் காணலாம்.

## சமூகக் காடு உருவாக்கல் ஆரம்பவிழா

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் மேற்கொள்ளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சமூகக் காடுகளை உருவாக்கும் நோக்குடன் கரைச்சி பொது மயானத்தில் சமூக காடுகளை உருவாக்கும் ஆரம்பநாள் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கரைச்சி பொதுமயான முன்றலில் வட்டு அபிவிருத்தி நிறுவன திட்ட அலுவலர் C.றேகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக சுழிபுரம் பிரதேச சபை செயலாளர் சுப்பிரமணியம் புத்திசிகாமணி, சிறப்பு விருந்தினராக சங்கானை (J/178) கிராம உத்தியோகத்தர் க.ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் 10.20 மணியளவில் மரம் நாட்டும் நிகழ்வு இடம்பெறும். (ஓ-58)

## களவேலை- நன்னீர்குளம்

க.பொ.த(உ/த) ஆசிரியருக்கான நன்னீர் குளம் கள வேலை நாளை காலை 8.30 மணிக்கு நடைபெற இருப்பதால் க.பொ.த. (உ/த) வகுப்புகளில் உயிரியல் கற்பிக்கும் ஆசிரி யர்கள் அனைவரும் தவறாது யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் 8.30 மணிக்கு சமுக மளிக்கும்படி தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும், யாழ். விஞ்ஞானச் சங்கமும் கேட்டுக் கொண்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ)

# மாகாண சபைகளின் 20வருட நிறைவு தொடர்பான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை மகாகாண சபைகளின் 20 ஆம் வருட நிறைவுக் கொண்டாட்டம் தொடர்பான கண்காட்சி ஒக்டோபர் 23 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வட மாகாண பிரதேச செயலாளர் அறிவித்துள்ளதாகவும்,

அதனை முன்னிட்டு உள்ளூராட்சி திணைக்களம் சார்பாக உள்ளூராட்சி மன்றங்களான மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை என்பன இக் கண்காட்சியில் பங்குபற்றும் பொருட்டு நவீனத்துவத்தையும் பண்பாட்டையும் எடுத்துக்காட்டும் வகையில் கட்டுரைகள், புகைப்படங்கள், உற்பத்திப் பொருட்கள், வரைபுகள், கழிவுப் பொருட்களினால் செய்யப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு வட மாகாண உள்ளூராட்சி திணைக்களம் கேட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தினரால் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு அறவுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-29)

## வரலஷ்சுமி சேமிப்புக்கழக ஓராண்டுவிழா

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்தின் வரலஷ்சுமி சேமிப்புக் கழக ஓராண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வரலஷ்சுமி சேமிப்புக் கழகத் தலைவி திருமதி ஈஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பதிகாரி திருமதி ஜெ.நவநீதம், சிறப்பு விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி மன்ற தலைவர் திருமதி ஜோ.ஜெபமணி, நீர்வேலி மேற்கு கிராம அலுவலர் பி.மகேந்திரன், மாலை வைரவர் தேவஸ்தான தலைவர் சி.ஹரீந்திரன், கௌரவ விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி மன்ற உத்தியோகத்தர் செல்வி க.சிவகௌரிதேவி, ஸ்ரீசுவர்ணா ச.ச.நிலையத் தலைவர் அ.சுவர்ணன், நீர்வேலி இலக்குமி சேமிப்புக் கழகத் தலைவி திருமதி ப.மரீனா, ஸ்ரீசுவர்ணா ச.ச. நிலையச் செயலாளர் க.சீலன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஓ)

## தெய்வீகத் தொடர் இசைப்பேருரை

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வரும் ''கந்தபுராணம்'' பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று சனிக்கிழமை '' பிரணவ உபதேசம்'' என்னும் தலைப்பில் இசைப்பேருரை நிகழ்த்துவார். (ஓ)

## சிறப்புச் சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை ''புத்தியும் சித்தியும்'' எனும் பொருளில் ஓய்வு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (ஓ)

## தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடாத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிமுதல் 6.30 மணிவரை எஸ். குமாரசாமியின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்களாக வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.துரைராசா, முகர்சிங் செல்வன் கே.நந்தகுமார், தபேலா சதாவேல்மாறன் ஆகியோர் பங்குபற்றுவார்கள். (ஓ)

## மஹோற்சவ கால ஆன்மீக சொற்பொழிவு

ஆவரங்கால் கிழக்கு புதுவை ஆலடி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தையொட்டி சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினரால் நடாத்தப்படும் ஆன்மீகச் சொற்பொழிவில் இன்று சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் 12.30 மணிவரை ''சிந்தை மகிழும் சங்கத்தமிழ்'' எனும் தலைப்பில் சிதம்பரநாதன் சசீவனும், நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ''பாவம் தீர்க்கும்தீர்த்தமும்'' எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்தியதசீதரனும் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஓ)

## ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி

கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண சமிதியால் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்திவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இதில் பஜனை, விசேட ஆன்மீக உரை, தீபாராதனை,பிரசாதம் வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ)

## சங்காபிஷேகம்

அச்செழு மத்தி ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறும். (ஓ)

## தேர்த்திருவிழா

திருவருள் மிகுபுதுவை ஆலடி முருகன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் இன்று சனிக்கிழமை தேர்த் திருவிழா நடைபெறும். காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும், காலை 10 மணிக்கு இரத ஆரோகணமும் நடைபெறும். நாளை காலை 11மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (ஓ)

## பரிசளிப்பு விழா

கடந்த வியாழக்கிழமை சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தால் நடத்தப்பட்ட சைவ சமயப் பரீட்சையில் கலந்துகொண்டவர்களுக்கும்,வெற்றியீட்டியவர்களுக்கும் இன்று சனிக்கிழமை அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலய பிரதான மண்டபத்தில் காலை 7.30 மணிக்கு பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

நிகழ்வில பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் சிவலிங்க யோககேந்திரா இயக்குநர் க.நிஜலிங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ஓ)

# நோத்முதல் கோபல்லவா வரை 76

### நடுவகுப்பார் செய்த கிளர்ச்சி

அவர்கள் கல்வித் தகுதியினாலேயே நடுவகுப்பார் என ஒரு பகுதியாக முன்னேறினார்கள். அவர்கள் ஆங்கிலக் கல்வி மூலம் தாராண்மை நெறிகளையும் கருத்துக்களையும், ஜனநாயக முறைகளையும் தன்மைகளையும், விரிந்த மனப்பான்மை, முன்னேற்ற இயக்கம் என்பவற்றைப் பற்றி நன்கறிந்தார்கள்.

இன்னும் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் எழுந்த புரட்சிகரமான இயக்கங்களையும், நவமான அரசியற் தத்துவக் கொள்கைகளையும் அறிந்தார்கள்.

இலங்கையில் சட்ட சபை நிறுவப்பட்டு பல்லாண்டுகளுக்குப் பின்னர் சட்டசபையைப் பெற்ற இந்தியர் குறுகிய கால வரையறைக்குள் நல்ல முறையில் முன் னேறிப் பூரண சுதந்திர தாகந் தீர்த்துக் கொள்வதற்காக இந்தியக் காங்கிரஸ் ஸ்தாபனத்தை1885 ஆம் ஆண்டில் நிறுவிக் கிளர்ச்சி செய்வதை அறிந்து உணர்ச்சி வசப்பட்டு அவர்களைப் போலத் தாமும் முன்னேற வேணவாக் கொண்டார்கள்.

நடுத்தர வகுப்பார் போதிய கல்வியறிவுடையவராய் இலங்கை அரசியல் அலுவல்களைக் கையேற்று நடத்த ஆயத்தமாய் இருக்கும் போது அவர்களுக்கு ஏன் உரிய முறையில் சந்தர்ப்பத்தை அளிக்கலாகாது எனப் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்தன. நடுவகுப்பாரால் ஆரம்பிக்கப்பட்டு, நடுவகுப்பாரால் ஆதரிக்கப்பட்டு அவர்களால் வழி நடத்தப்பட்டு வந்த இயக்கம் தேசிய இயக்கமாகவே நிலவியது. அவர்கள் தேசிய சுதந்திரத் துக்காகவே பணி செய்தனர்.

நடுவகுப்பார் அரசியற் சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்த காலத்துக்கு முன் பின்னாக இங்கிலாந்தில் இருந்த அரசியலமைப்பு முறையையும் அந் நாட்டவர் அதிலே சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தமை யையும் பற்றிச் சுருக்கமாகவாயினும் இங்கே அறிந்து கொள்ளல் இன்றியமையாததாகும். பாராளுமன்றத்தின் தாயகம் என்பதாலும், இலங்கையை ஆண்ட நாடாதலாலும் இங்கி லாந்தைப் பற்றி நாம் அறிதல் வேண்டும்.

நெப்போலியன் காலத்தின் முன் பின்னாக நாடெங்கும் மாற்றங்கள் ஏற்படலாயின. பிரபுக்கள், குருமார், பொதுமக்கள் என்ற அமைப்பு நீக்கப்பட்டுச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் நிலவவே புரட்சிகள் தோன்றின. புரட்சிவாதிகளின் கொள்கைகள் இங்கி லாந்தில் வெகு மந்தமாகவே பரவின. கர்ப் பூரம், நிலக்கரி,

**மீள் பார்வை**

ஈரவிறகு என்னும் எரிபொருள் களில் நெருப்புப் பற்றுவதற்கு ஒரு நேரப் பாகுபாடுண்டு. அதைப் போலவே அதிதீவிரம், தீவிரம், மந்தம் என்ற கதியில் புரட்சிக்கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் நாடுகளும் உண்டு.

இங்கிலாந்து மந்த கதியிலேயே போய்க் கொண்டிருந்தது. பழைமை பேணுவோரின் செல்வாக்கதிகமாயிருந்த காலம் அது. உயர் குடிப்பிறப்பினராட்சியில் பிரபுக் களும் விழுமியோரும் உட்குழுவில் அங்கம் வகித்த காலமும் அது. பிரபுக்கள் சபையிலும் நிலக்கிழார்கள் மாத்திரம் அங்கத்துவம் பெற்றிருந்தனர். பொதுமக்கள் சபையில் 1815 ஆம் ஆண்டி னமைப்பில் 658 அங்கத்தவர் இருந்தனர்.

இவர்களுள் 489 பேர் இங்கிலா ந்துக்கும், 100 பேர் அயர்லாந்துக்கும், 45 பேர் ஸ்கொத்லாந்துக்கும், 24 பேர் வேல்ஸ்சுக்கும் பிரதி நிதிகளாயிருந்தனர்.



**ஒரியன்ட் கழகத்தின் உறுப்பினர்கள்:-** ஆங்கிலேயர்களுக்கு தமது நாட்டினை நினை வூட்டும் சிறிய இங்கிலாந்தாக ஒரியன்ட் கழகம் காணப்பட்டது. இக் கழகத்திற்கு உள்ளூர் வாசிகள் உட்செல்வது தடைசெய்யப்பட்டிருந்தது. ஒரியன்ட் கழகம் வெளிநாட்டு மேலக மக்கள் குழுமத்தின் கழகமாகத் திகழ்ந்ததனால் அதில் அங்கத்துவம் கிடைப்பது கௌரவமாக கருதப்பட்டது. அக்காலத்தில் மேலக மக்கள் குழுமத்தினர் பலர் இதில் அங்கத்துவம் பெற்றிருந்தனர்.(ARNOLD WRIGHT -1900)

அக்காலத்தில் மாநிலத் தொகுதிகள், புரத் தொகுதிகள், பல்கலைக்கழகத் தொகு திகள் என முப்பெரும் தொகுதிப் பிரிவுகள் இருந்தன. தொகுதிகள் மிகவும் பெரியன வாயும் மிகவும் சிறியனவாயும் இருந்த போதிலும் பிரதிநிதித்துவம் ஒரே அளவினதாய் இருந்தது. தொகுதிகள் தோறும் குடிசனத் தொகை வெவ்வேறளவினதாயிருந்த போதிலும் அது கவனிக்கப்படவில்லை.

இங்கிலாந்திலுள்ள கோன்வால் என்ற பிரிவிலிருந்து 44 பிரதிநிதிகளும், அதைப் போல எட்டு மடங்கு குடிசனமுள்ள ஸ்கொத்லாந்திலிருந்து 45 பிரதிநிதிகளும் தெரியப்பட்டனர் என்பது பெரிய குறையாகவே இருந்தது. சில தொகுதிகளில் பல்லாயிரக் கணக்கான வாக்காளரும், சில தொகுதிகளில் பத்துப் பன்னிரண்டு வாக்காளர்களும் இருந் தனர். எல்லாமாக 186 பிரதிநிதிகளைக் கொண்ட மாநிலத் தொகுதிகள் இவ்வாறாகப் புரத் தொகுதிகளின் நிலை வேறாயிருந்தது.

புரத் தொகுதிகள் பலவகைப்பட்டனவாய் பல நிலைகளில் இருந்தன. அவை எல்லாமாக 467 பிரதிநிதிகளைக் கொண்டவை. அங்கேயும் பிரபுக்கள், நிலக்கிழார்கள் செல்வாக்கு நிலவிற்று. நியமனப்புரங்கள், பாழ் நிலைப்புரங்கள், கைவசப் புரங்கள் என்பனவாதிய புரத் தொகுதிகளில் பிரபுக்களின் திருவிளையாடல்கள் அதிகமாகவே இருந் தன. அவர்கள் தம்மவரையம் தமக்குப் பந்தம் பிடிப்பவரையும் அங்கே நியமித்திருப்பதாக அறிவித்தாற்போதும், “பொதுமக்கள் எங்கை உமக்கல்லாதெப் பணியுங் செய்யற்க, உமக்கே ஆட்பட் டோம்” எனக்கூறி அவர் களுக்கே வாக்களித்தல்வேண்டும். கைக் கூலியும் பலாத்காரமும் அச்சுறுத்தலும் தேர்தல் வைபவங்களில் சகசமாயிருந்தன.



பிரதிநிதித்துவ முறையில் இருந்த அலங்கோலங்கள் இன்னும் பல குடிசனம் இல்லாத வெறும் நிலங்களும் பாழ்புரங்களும் பிரதிநிதிகளையுடையனவாயிருப்பக் குடிசனம் நிறைந்த மன்செஸ்ரர், பர்மிங் காம், லீட்ஸ், செவீல்ட் போன்ற கைத்தொழில் நகரங்கள் பிரதிநிதித்துவமில்லாமலே இருந்தன.

**க.சி.குலரத்தினம்**

இங்கிலாந்தில் அரசியற் சீர்திருத்தங் கோரிய ஏழைகளுக்கு ஏழைத் தொழிலாளியின் மைந்தனாய விலியம் கொபற் என்ற பெரியார் தலைவராயும் முதல்வராயும் இருந்தார். அவர் சில காலம் அரசியல் வாராந்த ஏடு என்ற பத்திரிகையைப் பிரசுரித்து இரண்டு பெனிக்கு அதை ஏழைகளும் வாங்கிப் படிக்க வசதி செய்தார். அவர் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஏழைகளுக்கு அரசியலறிவூட்டி அவர்களைச் சிந்திக்க வைத்தார். அவர் ஏழைகளிடம் “உங்களுக்குச் சமூக பொருளாதார மாற்றங்களுக்கு முன் வாக்குரிமையே பிரதானமாக வேண்டப்படுவது. பாராளுமன்றத் திருத்தமே முதலில் செய்யப்பட வேண்டியது. தொழிலாளர் விவசாயிகள் பாராளுமன்றத்திற்கு பிரதிநிதித்துவப் பலத்தைப் பெற்றுக்கொண்டால் பிற திருத்தங்கள் தாமதமாகவே வந்து சம்பவிக்கும்” எனக் கூறினார். (தொடரும்)

# யாழ்.குடாநாட்டில் ஆங்கிலமொழிக் கற்றல், கற்பித்தல் 6

## பிரயோக மொழியியலினூடாக ஓர் நோக்கு

ஒரு முதுகலைமாணி நிறைவு செய்த ஆங்கில ஆசிரியன் நிறைவான பல வருடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கக் கூடிய ஆசிரிய னாகத் தன்னை மாற்றிக் கொள்கின்றான். பல கல்லூரிகள் ஆசிரியர் கல்வியில் ஈடுபடு வதால் ஒவ்வொரு வருடமும் அவர்களால் பல ஆங்கில ஆசிரியர்களை நியமிக்கக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் ஆசிரியக் கல்வியை இள வயதிலே பெறுவதால் அவர் களின் சேவைகள் மூலம் அதிகளவு மாண வர்கள் நன்மை அடைகின்றார்கள். ஆனால் யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை தற் சமயம் கல்வியியற் கல்லூரிகளை மாத்திரம் ஆங்கில ஆசிரியர்களிற்காக எதிர்பார்த்து நிற்கின்ற நிலை தோன்றியுள்ளது.

இதன் காரணமாக இது வரை ஆசிரிய பயிற்சியை வழங்கி வந்த பலாலி ஆசிரியர் கலாசாலை எதிர்காலத்தில் எவ்விதத்தில் ஆசிரியர்க ளிற்கு பயிற்சியை வழங்குவது என்ற வினாவும் எழுந்துள்ளது.

எமது ஆசிரி யர்களில் பெரும்பாலானோர் பட்டப்படிப்பு மற்றும் முதுகலைமாணி படிப்பு போன்ற வற்றை நிறைவு செய்யும் பொழுது 45-50 வயது எல்லையைத் தாண்டுவதுடன் நிர்வாக மட்டத் திலான தொழில்களையும் நாடிச் செல்கின்றனர். இதனால் இவர்களது பட்டறிவு மாணவ சமுதாயத்தை எட்டும் சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

மிக இளவயதில் ஆசிரியப் பயிற்சிக்கும் கல்விக்கும் முகம் கொடுக்கும் ஆசிரியனிடத்தில் கூடுதலான கற்பித்தற் தொடர்பை இனங்காணமுடியும்.

இவ்விடயத்தில் தேசிய கல்வி நிறுவனமும் பல்கலைக்கழகங்களும் அதிக அக்கறை செலுத்த வேண்டும். ஆசிரி யக் கல்விக்கான வயதெல்லை பற்றிய ஓர் பொதுவான திட்டம் வரையப்பட வேண்டும்.

**“முகாம் முறைக் கற்பித்தல்”**

ஆங்கில மொழியின் தேர்ச்சி என்பது நகர்ப்புறங்களில் அமைந்திருக்கும் பாடசாலை மாணவர்களின் வெளிப்பாடேயொழிய மற்றைய கிராமப்புற மாணவர்கள் இத் தேர்ச்சியை வெளிக்கொணர முயலாது என்ற தப்பான கருதுகோள் எம் கல்வியாளர்கள் மத்தி யில் நிலவுவது மாத்திரமல்ல இக் கருதுகோளின் அடிப்படையில் ஆங்கில்க் கல்வியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமது நியாயங்களையும் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒன்றை மட்டும் கூறலாம். பலா சகாப்தங்களாகக் காணப்படுகின்ற சமச்சீரற்ற போதனை மற்றும் வளங்கள், இப்படியானதொரு மாயையை எம் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

இதற்கு இங்கு நிலவுகின்ற *நகரம் நோக்கிய படையெடுப்பும்* ஓர் காரணமாக அமைகின்றது. கைவிரல் விட்டு எண்ணக் கூடிய பாடசாலைகள் ஓர் தனித்துவமான பல்கலைக் கழகம் மற்றும் கல்வியியற் கல்லூரி போன்றவை *ஆங்கில மொழிக் கற்றல் பற்றிய* விழிப்புணர்வையும் அவற்றின் மூலம் தோன்றும் மாணவர்களின் தேர்ச்சி களை ஒப்பிடும் நிறுவனங்களாகத் தொழிற்படுகின்றன.

கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகள் இவ் வரையறைக்கும் மதீப்பீட்டுக்குள் தங்களை உள்ளடக்காமல் ஏதோ இருப்பதை வைத்து சமாளிக்கலாம் என்ற நிலையில் இருக்கின்றன. இத்தகைய *மனப்பாங்கு* ரீதியிலான அடுக்கமைவு உடைத்தெறியப்பட வேண்டும். ஆங்கில மொழித் தேர்ச்சி என்பது ஓர் குறிப்பிட்ட வரையறைக்குட்டபட்ட சமூகம் எய்துகின்ற மிகப் பெரும் சாதனை அல்ல இத் தேர்ச்சியானது சமூகத்தின் சகல மட்டங்களிலும் எட்டப்படவேண்டும் இவ்விழிப்பு ணர்வை நான் தமிழ் நாட்டில் உள்ள மாண வர்களின் மனப்பாங்கில் இருந்து அறிந்து கொண்டேன் .

சுருங்கக் கூறின் *முகாம்* அமைத்து கற்பிக்கும் முறை எப்படி அமுல் நடாத்தப்படுகின்றது என்பதை நான் நேரில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஆங்கில மொழி கற்பித்தலில் வசதிகள் குறைந்த கிராமப்புற பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து வசதிகள் கூடியநிலையங்களில் கடமைபுரியும் ஆசிரியர்கள் கூட்டாக ஓர் வேலைத் திட்டத்து டன் அவ்விடங்களிற்குச்சென்று முகாம் அமைத்து மாணவர்களின் ஆங்கில மொழித்திறனை விருத்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுவது தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் பின்பற்றப்படும் ஓர் ஆங்கில மொழிப் போதனை சார் நடவடிக்கையாகும். ஏனெனில் அங்கு பாடசாலைகள் எல்லாம் மாலை 4.30 அல்லது 5.00 மணிக்கே மூடப்படுகின்றன. அத்துடன் தவணை விடுமுறைத் திட்டங்கள் அங்கு இருப்பதில்லை.

இவ்வகையாக *முகாம்* அமைத்து கற்பிக்கும் செயற்பாட்டை பல்கலைக்கழகங்களின் கல்விப் பீடங்கள் திட்டமிட்டு மேற்கொள்கின்றன. இதை ஏன் நான் இங்கு குறிப்பிட முயல்கின்றேன் என்றால் எமது சமச்சீரற்ற முறையில் நியமிக்கப்பட்டிருக்கும் ஆங்கில ஆசிரியர்கள் இப்படியான செயற்பாடுகளைப் பற்றிச் சற்று சிந்திக்கலாம். கல்வித் திணைக்களங்களின் வழிகாட்டலின் கீழ் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டு விடுமுறைக் காலங்களில் கிராமப்புற பாடசாலை மாணவர்களின் ஆங்கிலக் கல்வி முன்னேற்றத்திற்கும் நாம் சற்று ஊன்றுகோலாக நிற்பதில் தவறில்லை. இவ்வகையான செயற்பாடுகள் வலயங்கள், கோட்டங்கள், பாடசாலைகளிற்கிடையே நிலவுகின்ற போட்டி மனப்பாங்கை சற்றுத் தணிக்கச் செய்வதுடன் ஒட்டுமொத்தமாக மாணவர்களின் வளர்ச்சியை சமச்சீராக்க முடியும்.(தொடரும்)

**வ.பரந்தாமன்**
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப் போதனை நிலையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# உள்நாட்டு மரக்கறிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து உயர்விளைவு பெறுவதற்கான தொழில்நுட்பம்

யாழ். குடாநாட்டு உள்ளூர் மரக்கறிச் செய்கையாளர்கள் இன்று அதிகரித்த உற்பத்திச் செலவு, நிலத்தடி நீர் வற்றிப் போதல், நிலத்தடி நீர் மாசடைதல், அதிகரித்த நோய் பொருட்களில் பிரயோகம் போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்நிலையில் உள்ளூர் மரக்கறி உற்பத்தியானது குறைவடைந்துள்ளது இவ்வாறான பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை வெளிப்படுத்தும் நோக்கில் யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் விவசாயக் கண்காட்சியில் உள்ளூர் மரக்கறிகளின் உற்பத்திச் செலவைக் குறைத்து உயர் விளைவைப் பெறுவதற்கான தொழில் நுட்பங்கள் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- சொட்டு நீர்ப்பாசனத்துடனான பயிர் செய்கை
- தூவல் நீர்ப்பாசனத்துடனான பயிர்செய்கை
- பயிர்ச்செய்கையில் பொறிப்பயிர் செய்கை

சொட்டு நீர்ப்பாசனத்தின் கீழான பயற்றைச் செய்கை



- எல்லைப் பயிருடன் பயிர்ச் செய் கை யை மேற்கொள்ளல்
- பூசணிக்குடும் பப்பயிர்களில் பழ ஈ முகாமைத்துவம்
- தாவரப் பீடை நாசினியுடன் இலை மரக்கறிச் செய்கை

மேற் குறிப்பிட்ட தொழில்நுட்பங்களைப் பிரயோகித்து உள்ளூர் மரக்கறிகளான பயற்றை, வெண்டி, கத்தரி, தக்காளி, பாகல், புடோல், மிளகாய், பூசணி இனங்கள் மற்றும்

மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் சோளம் எல்லைப் பயிர்



இலை மரக்கறிகளான பொன்னாங்காணி, வல்லாரை, கங்குன், முளைக்கீரை, பசளை புதினா போன்ற பயிர்கள் வெற்றிகரமாக செய்கை பண்ணப்பட்டுள்ளன.

**சொட்டு நீர்ப்பாசனத்துடனான பயற்றை செய்கை**

இச் செய்கை முறையில் நீரானது வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டதுடன் பயிருக்கு தேவைப்படும் நேரத்தில் வேண்டிய அளவு நீரை 15-20 நிமிடத்திற்குள் வழங்க முடிந்தது அத்துடன் பயிர்களின் அடிப் பகுதியைச் சுற்றி மூடுபடை இடப்பட்டு எதால் பயிரிடையே வளரும் களைகள் கட்டுப்படுத்தப்பட்டதுடன் நன்மை தரும் பூச்சிகளின் குடித் தொகைப் பெருக்கத்திற்குச் சாதகமான நுண்கால நிலை உருவாக்கப்பட்டது. அதேவேளை தீமை தரும் பூச்சிகளிற்குச் சாதகமற்ற சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டதன் காரண்மாக அவற்றின் குடித்தொகை வினைத்திறனாகக் கட்டுப்படுத்த முடிந்தது. இதனால் நோய் பீடைக் கட்டுப்பாட்டிற்கான செலவு குறைக்கப்பட்டதுடன் உற்பத்திச் செலவும் குறைக்கப்பட்டுள்ளது.


**தூவல் நீர்ப்பாசனத்துடன் மிளகாய்ச் செய்கை**

தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் மிளகாய்க் கன்றுகள் நாட்டப்படுவதற்கு 2கிழமை முன் எல்லைப் பயிராக சோளம் நடுகை செய்யப்பட்டது. இதனால் மிளகாயைத் தாக்கும் பிரதான பீடையான பனிப்பூச்சி, வெண் ஈ என்பவற்றின் குடித்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக மிளகாயில் ஏற்படும் குருமன் நோய் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இப் பயிர்ச் செய்கையில் பூச்சிப் பீடை தாக்கா வண்ணம் தாவரப்பீடை நாசினியான உள்ளிநாசினி, வேப்பம் விதை நாசினி 7நாள் இடைவெளியில் விசிறப்பட்டதன் காரணமாக இரசாயனப் பீடை நாசினிப் பாவனை தவிர்க்கப்பட்டு உற்பத்திச் செலவு குறைக்கப்பட்டுள்ளதுடன் தரமான சிறந்த தோற்றமுள்ள விளைவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**வெண்டி பயிர்களைச் சுற்றிப் பொறிப் பயிராகச் சணல்**

வெண்டிப்பயிர்களைச் சுற்றி சணல் பொறிப்பயிராகப் பயிரிடப்பட்டுள்ளதால் வெண்டியைத் தாக்கும் பச்சை இலைத்தத்தி காய்துளைப்பான் போன்ற தீங்கு விளைவிக்கும் பீடைகளின் தாக்கம் குறைக்கப்பட்டுள்ளது. பீடைகள் பொறிப்பயிரைத் தாக்கியதால் பொறிப்பயிரிற்கு மட்டும் இரசாயன நாசினி

வெண்டிப் பயிர்களைச் சுற்றிப் பொறிப் பயிராகச் சணல்



விசிறப்பட்டதன் மூலம் இரசாயனத்திற்கான செலவு குறைக்கப்பட்டதோடு நஞ்சற்ற உற்பத்தியையும்பெற முடிந்தது.

**தூவல் நீர்ப்பாசனத்துடன் கத்தரிப் பயிர்களைச் சுற்றி எல்லைப் பயிராக சோளம்**

இத் தொழில்நுட்பம் கத்தரிப் பயிரைத் தாக்கும் பிரதான பீடைகளான காய்துளைப்பான், பச்சை இலைதத்தி, வெண்ஈ போன்ற

கத்தரிப்பயிரைச் சுற்றி சோளம் எல்லைப் பயிர்



வற்றின் குடித்தொகை பெருக்கம் குறைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான பீடைநாசினிப் பாவன்னச் செலவு குறைக்கப்படுவதனால் உற்பத்திச் செலவு குறைக்கப்படுவதுடன் நஞ்சற்ற உற்பத்தியையும் பெற முடிந்துள்ளது.

**பூசணிக் குடும்பப் பயிர்களில் பழஈ முகாமைத்துவம்**

பாகல், புடோல், செய்கையில் பிரதான பீடையான பழ ஈயைக் கட்டுப்படுத்த வாழைப் பழப் பொறி வைத்தல் மூலமும் தலைகீழ் V வடிவப்பந்தல், வேலி முறைப்பந்தல், சாதாரண பந்தல் போன்ற பந்தல் அமைப்புக்கள் மூலமும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பழ ஈ முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.

**தாவரப் பீடை நாசினியுடன் இலை மரக்கறிச் செய்கை**

அதிகளவு போசணைச் சத்துக்களை உள்ளடக்கிய இலை மரக்கறிகளை தரமானதாகவும், நஞ்சற்றதாகவும் பெற்றுக்கொள்வதற்காக இவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும் இலையரிபுழு, இலைச்சுரங்க மறுப்பி போன்ற பூச்சிபீடைகள் உள்ளிக்கரை சல், வேப்பம் விதைக்கரைசல் போன்றன பயன்படுத்தப்பட்டு வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.

சி.சிவகுமார்
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

# தானியப் பயிர்ச்செய்கை

இன்றைய காலகட்டத்தில் உணவு உற்பத்தி உலகளாவிய ரீதியில் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இந்நிலையில் மேலும் நீடிக்குமென ஆய்வுகள் மூலம் தெரியவருகின்றது. இந்நிலையில் எமது குடாநாட்டு விவசாய செய்கையை மாற்றியமைக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. இதற்காக எமது பாரம் பரிய தானியச் செய்கையில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அரிசி, கோதுமை மாவிற்கு மாற்றீடாக தானியத்தை பயிரிட்டு எமது உணவுத் தேவையை பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

தரிசாக உள்ள நிலங்க ளிலும் நெல் அறுவடையின் பின் வயல் நிலங்களிலும் இப்பயிர்ச் செய்கையை வெற்றிகரமாகச் செய்கை பண்ண முடியும்.

சோளப் பயிர்ச்செய்கை



எனவே இச்செய்கையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இப்பயிர்களின் பயிர்ச் செய்கை பற்றிய செயல்முறை விளக்கங்களுடன் கூடிய கண்காட்சியை விவசாயத் திணைக்களம் ஒழுங்குபடுத்தியுள்ளது

இக் கண்காட்சியில் கீழ்வரும் தொழில் நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

- சோளப் பயிர்ச்செய்கை
- குரக்கன் பயிர்ச்செய்கை
- சாமை பயிர்ச்செய்கை

குரக்கன் செய்கை



- திணைப் பயிர்ச்செய்கை

**சோளப் பயிர்ச்செய்கை**

- சோளப்பயிர்ச்செய்கையின் வளர்ச்சிப் பருவங்களும், அவற்றிற்கான நடுகை இடைவெளி, பயிரடர்த்தி. பசளைப்பிரயோகம் என்பன செயல் முறையுடன் கூடிய விளக்கங்களுடன் காட்சிபடுத்தப்பட்டுள்ளது.

- மிளகாய், வெங்காயம் போன்ற பணப் பயிருக்கு மாற்றீடாக சோளச்செய்கையை மேற்கொண்டு கூடிய வருமானத்தை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை உற்பத்தி செலவு மூலம் எடுத்துக் காட் டப் பட்டுள்ளது.

1000 சதுரமீற்றர் (1/4 ஏக்கர்) உற்பத்திச் செலவாக 20000 ரூபாவினை செலவு செய்து வருமானமாக முத லாம் தர பொத்திகள் 5000X 10 = 50,000/=; இரண்டாம்தரப் பொத்திகள் 2500X05= 12,500/= விற்பனை செய்வதன் மூலம் நிகரலாபமாக 42,500/= இனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- சோளச் செய்கையை விஸ்தரிப்பதன் மூலம் கால்நடைத் தீவனத்திற்கு தேவையான மூலப்பொருளை குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையும் அறுவடையின் மிகுதியை கால்நடை உணவாகவும், கூட்டெருவுக்கும் பயன்படுத்தலாம் என்பது விளக்கப்பட்டுள்ளது.

பச்சை பொத்தியாக அறுவடை செய்து அவித்துச் சாப்பிடுவதன் மூலமும், கோதுமை மா, அரிசிமாவுக்கு மாற்றீடாக பாவித்தும் போசணையை மேம்படுத்தமுடியும். குறிப்பாக சோளத்தில் காணப்படும் லைசின் எனப்டும் அமினோ அமிலத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**குரக்கன் செய்கை**

- குரக்கன்செய்கையில் உயர்விளை வைப் பெறுவதற்கான நாற்றுமேடை தொழில்நுட்பமும், அதன் முக்கியத்துவமும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 1/4 ஏக்கரிற்குத் தேவையான நாற்றுக்களை 200 கிராம் விதையினைப் பாவித்து வீரியமான நாற்றுக்களை உருவாக்கும் தொழில்நுட்பம் விளக்கப்பட்டுள்ளது.

- உயர் விளைவு தரும் ரவி, ராவணா இனங்கள் உள்ளூர் இனத்துடன் ஒப்பிட்டு செயல்முறையுடன் கூடிய விளக்கத்துடன் காட்டப்பட்டுள்ளது. ரவி, ராவணா உள்ளூர் இனத்துடன் ஒப்பிடும் போது வயது கூடிய இனமாக இருந்தபோதிலும் இரு மடங்கு விளைவைப் பெற்றுக்கொள்ளலாம்.

- நடுகை முறைகளான நாற்று நடுகை, வீச்சுவிதைப்பு, வரிசை விதைப்பு என்பன செய்முறையுடன் காட்டப்பட்டுள்ளது.

- பயிராக்கவியல் தொழில்நுட்பங்களை பயிரடர்த்தி, பசளைப் பிரயோகம் போன்ற விடயங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- குறைந்த செலவுடன் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்வதுடன் கூடிய காலத்திற்கு சேமித்து வைக்கவும் முடியும்.

**சாமை திணைப்பயிர்ச்செய்கை**

- சிறுதானிய செய்கையான திணை, சாமை நாட்டியதிலிருந்து அறுவடை வரை பேணப்படவேண்டிய தொழில்நுட்பங்களான நடுகை முறை, இனங்கள், பசளைப்பிரயோகம் பயிரடர்த்தி என்பன செயல்முறை விளக்கங் களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சாமை திணை பயிர்ச்செய்கை





- போசணையை மேம்படுத்துவதுடன் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்து வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதனை உற்பத்தி செலவு மூலம் விளக்கப்பட்டுள்ளது.

# நீதியாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடாத்த அரசு பூரண ஒத்துழைப்பு

## சுசில் பிரேமஜெயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

17ஆவது அரசியலமைப்பின் கீழுள்ள ஆணைக்குழுக்கள் இயங்காமலேயே கடந்த ஜனாதிபதி தேர்தல் சுமுகமான முறையில் நடைபெற்றது. இவ்வாறான நிலையில் இரு மாகாணசபைகளுக்கு மான தேர்தலின் போது தேர்தல் சட்ட திட்டங்களுக்கு எதிராக செயற்பட வேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளோம் என்று முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில்பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலைய கேட்போர் கூடத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்பாடுசெய்திருந்தசெய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

17ஆவது அரசியலமைப்பு சீர் திருத்தத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஆணைக்குழுக்கள் இல்லாமலே அந்த தேர்தல் சுமுகமான ம்றை யில் நடை பெற்று. அதேபோல இந்த தேர்தலையும் சுமுகமான முறையில் நீதியானதும் நேர்மையானதுமான முறையில் நடத்துவதற்கு அரசாங்கம் தேர்தல்கள் திணைக் களத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

இரு மாகாண சபைகளுக்குமான வேட்பு மனு கோரப்பட்ட தினத்திலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீவிர பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவ்வாறான தொரு நிலையில் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி யீட்டுவதில் எவ்விதமான ஐயப்பா டும் இல்லை.

சுயாதீனமாகவும் பக்கச் சார் பின்றியும் செயற்படுகின்ற தேர்தல்கள் ஆணையாளருக்கு எவரும் அழுத்தங்களை கொடுக்க முடியாது.

**அமெரிக்க தூதுவர் தேர்தல் ஆணையாளரை சந்தித்தார் என்பதில் உண்மையில்லை**

தேர்தல் வன்முறைகளும் அரச சொத்துக்கள் தேர்தலில் பயன்படுத்துவதாக கூறப்படுகின்ற நிலையிலேயே தேர்தல்கள் ஆணையாளரை அமெரிக்கதூதுவர் றொபட் ஓபிளக் சந்தித்துள்ளார் என்பதில் எவ்விதமான உண்மையும் இல்லை.

இந்த இரண்டு மாகாண சபைத் தேர்தலின் போது அரசாங்கம் அரச சொத்துக்கள் பயன்படுத்துவதாக எதிர்கட்சிகள் குற்றஞ்சாட்டுமாயின் எதிர்கட்சி எம்.பி.களுக்கு பாராளுமன்றத்தினால் வழங்கப் பட்டுள்ள வாகனங்களை அவர்கள்தேர்தலுக்காக பயன்படுத்த முடியாது.

சுதந்திர்மான தேர்தலை நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளநிலையில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் ஆயுதங்களுடன் வடமத்திய மாகாணத்தில் சுற்றித் திரிவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஓ)

# கதிர்காமர் கொலை வழக்கின் எதிரிகளுக்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபருடாக அழைப்பாணை

## மேல் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிகாமர் படுகொலை வழக்கில சந்தேக நபர்களான விடுதலைபபுலிகளின் தலைவர் வே. பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் மற்றும் சார்ள்ஸ் மாஸ்டர் ஆகியோ ருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மீண்டும் அழைப்பாணை விடுத் துள்ளது.

கதிர்காமர் படுகொலை வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரமசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அழைப்பாணை மீண்டும் விடுக்கப்பட்டது.

வழக்கில் முதலாம் எதிரியாக புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், 2ஆம் எதிரியாக உளவுத்துறை தலைவர் பொட்டு அம்மான், 3ஆம் எதிரியாக சார்ள்ஸ் மாஸ்டர், 4ஆம் எதிரியாக கோமதி மணிமேகலை (மதி), 5ஆம் எதிரியாக முத்தையா சகாதேவன், 6ஆம் எதிரியாக ஆரோக்கிய நாதன் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களில் முதல் மூன்று எதிரிகள் மன்றில் ஆஜராகாத நிலையில் வழக்கு இடம்பெற்று வருகின்றது. எதிரிகளில் 4,5, 6ஆம் எதிரிகள் நேற்று முன்தினம். மன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கு விசாரணையின் போது அரச தரப்பில் ஆஜராகிய அரச சட்டத்தரணி நீதிமன்றில் கூறுகையில்,

முதல் மூன்று எதிரிகளுக்கும் கடந்த தவணை முல்லைத்தீவு பிரதேச செயலாளர் மூலம் அழைப்பாணைஅனுப்ப்ப்பட்டதாகவும்வன்னி பகுதிகளில் தற்போதைய சூழ்நிலை காரணமாக பிரதேச செயலாளரின் அறிக்கை பெறப்பட முடியாதுள்ளதாகவும் ஆகவே மீண்டும் 1,2,3 ஆம் எதிரிகளுக்கு மீள அழைப் பாணை அனுப்ப உத்தரவிடவேண்டு மென்று நீதிமன்றை கேட்டுக் கொண்டார்.

5ஆம் எதிரி சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள்ான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, 6ஆம் எதிரி சார்பில் ஆஜராகிய் சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் வாதிடுகையில் தமது கட்சிக்காரர்கள் கடந்த 2005ஜுலை மாதம் தொடக்கம் 3 வருடங்களுக்கு மேலாக சிறை வாசம் அனுபவிப்பதாகவும் காலத்தை கருத்தில் எடுத்து பிணை வழங்கும் படியும் கேட்டுக் கொண்டனர்.

பிணை விண்ணப்பத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த அரச சட்டத்தரணி நீதிமன்றில் தொடர்ந்து கூறியதாவது,

5,6ஆம் எதிரிகள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் இந்த சட்டத்தின் கீழ் பிணை வழங்கும் அதிகாரம் நீதிமன்றிற்கு இல்லை எனவும் மேலும் கதிர்காமர் கொலை வழக்கு மற்றைய வழக்குகளை விட வேறுபட்டது எனவும் 5, 6ஆம் எதிரிகளுக்கு எதிராக சாட்சியங்கள் இருப்பதாகவும் தெரிவித்து பிணை வ்ழங்குவதை ஆட்சேபித்தார்.

6ஆம் எதிரியின் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா இதற்கு பதிலளித்து கூறுகையில், முன்னாள் அமைச்சர் கதிர்காமரோ அல்லது யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் சமன் என்றும் பயங்கர வாத தடை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதல் வழக்கு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டதென்றும். அந்த வழக்கில் சில எதிரிகளும் மேல் நீதிமன்றில் பிணை வழங்கப் பட்டதென்றும் எனவே நீதிமன்றம் பிணைவிண்ணப்த்தை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

5ஆம் எதிரியின் சட்டத்தரணி விநாயகமூர்த்தி நீதிமன்றில் தெரிவிக்கையில்,

குற்றப்பத்திரம் எதிரிகளுக்கு கையளிக்கப்படாதபடியால் எந்த சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடியவில்லையென்று கூறியதையடுத்து 5ஆம் 6ஆம் எதிரிகளுக்கு குற்றச்சாட்டு பத்திரம் கையளிக்கப்பட்டது.

அரச சட்டத்தரணி, எதிரிகளின் சட்டத்தர்ணிகளின் வாதத்தை செவிமடுத்த நீதிபதி 5, 6ஆம் எதிரிகளுக்கு பிணை கொடுப்பது சம்பந்தமாக எதிரிகள்பற்றிய முழு அறிக்கையை சமர்ப்பிக்கும்படி கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினருக்கு உத் தரவிட்டது. 1,2,3 ஆம் எதிரிகளுக்கு அழைப்பாணை முல்லைத்தீவு பிரதேச செயலாளர் மூலம் அனுப்பும் படியும் உத்தரவிட்டு வழக்கை செப் டெம்பர் மாதம்18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஓ)

**The Annual General Meeting of Jaffna College Alumni Association**

The above meeting will be held on 06th September 2008at 3.30pm in Jaffna College Primary School Hall. Your presence is very much appreciated.

**Annual General Meeting Agenda**


- Prayer
- Minutes of the last Ex .Co meeting
- Secretary 'sReport
- Treasurer 'sReport
- Principal 'sReport
- Election of new office bearers
- Any other Business

Sorry to state that we are unable to send personal invitations.

**Thank you,**
**Hony- Secretary.**

(C/1423)

## நல்லூரான் திருவடிக்கு இன்று கார்த்திகைத் திருவிழா



### கார்த்திகை விழாவினைக் கண்டுகளிப்போம்

கார்த்திகை மாதரின் பால்
அமிர்தத்தை உண்ட பாலன்
கூர்த்தவேல் கொண்டு சூரன்
மார்பினைக் கிழித்த தீரன்
கார்த்தி கேயனின் நாமம்
அடியவர் பாடி ஏத்த
கார்த்திகை விழாவினை நாம்
கண்டு கண் களிப்போம்

*கவிமணி கந்தமுருகேசதாசனார்.*

### கார்த்திகை நாதனே தீர்த்திடு துயரெல்லாம்

கார்த்திகை நாதனுக்கோர் விண்ணப்பம்
காரியம் யாவிலும் வெற்றிகள் வேண்டும்
நேர்த்திகள் ஆயிரம் வைத்தோமுனக்கு
நிரந்தர தீர்வினைத் தரவேண்டும்
ஆர்த்தெழும் இசையினால் அர்ச்சனையுனக்கு
ஆலய வீதியில் எழுந்தன கந்தா
தீர்த்திடு துயரெல்லாம் திருவூரெங்கும்
திருக்கை வேலினால் தீயன அகற்றிடவேண்டும்

*மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்*

### மயூரம் போலானோம் இன்று

கந்தா உன் வாசலிலே
கார்த்திகைப் பெருநாள் –ஈசன்
மைந்தா உன் மாளிகையில்
மங்கலத் திருநாள் –வணங்கி
வந்தோரை வாழவைப்பாய்
வள்ளி மணவாளா –உனக்கு
செந்தூரத் திலகமிட்டு சீர்வரிசை செய்து
மந்தாரம் கண்டாடும் மயூரம்
போலானோம் இன்று

*கவிப்பித்தன்.*

### தாமரை செய்த தவமெதுவோ

தாமரை மலர்கள் மலர்ந்தது –எங்கள்
சிவனின் பொறிகளால் மகிழ்ந்தது
தாமரை செய்த தவம் எதுவோ –எமக்கு
ஆறு முருகனைத் தந்ததுவே
கார்த்திகைத் தீபம் ஏற்றுங்கள் –எங்கள்
நல்லூரில் அவனை வாழ்த்துங்கள்
கோடி வினை தீர்த்திடுவான் –எங்கள்
குமரன் அழகனை போற்றுங்கள்.

*மனர் சின்னையா –செம்பியன் செல்வி*

### "பெருவீதி நல்லையில் பவனிவா"

பல்லவி

விருந்தனாய் வேடனாய் வந்தவா–வேடுவப்
பெண்மகள் வள்ளியை மணந்தவா! (விருத்)

அனுபல்லவி

திருநீறு சந்தணம் புனைந்தவா–வேங்கைத்
தருவாகி மண்மிசை நின்றவா! (விருத்)

சரணம்

திருவிரு குழந்தையாய் பிறந்தவா –சக்தி
திருவேலைக் கையிலே கொண்டவா
பெருவோலைச் சப்பறம் ஏறிவா –நல்லைப்
பெருவீதி நான்கிலும் பவனிவா! (விருத்)

*எஸ்.சிவதாசன்.*

# எமது மக்கள் அனைவரும் ஒன்றாக அணி திரண்டு படையினரின் கொடூரத்திற்கு முடிவு கட்டவேண்டும்

## பா.நடேசன் உரை

(கொழும்பு)

தமிழ் மக்களின் எல்லாப் பலத்தினையும் ஒருங்கிணைந்து எதிரிக்கு ஒரே சக்தியாக தக்க பதிலடி கொடுக்கவேண்டும் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் வியாழக்கிழமை நடை பெற்ற போர் எழுச்சிகளின் சிறப்பு ஒன்று கூடலில் சிறப்புரையாற்றுகையில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது,

போர் எழுச்சிக்குழுக்களின் கருத்துக்கள் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை தந்துள்ளது. விடுதலைப்போராட்டத்தின் ஒவ்வொரு வளர்ச் சிகாலத்திலும் மக்களின் பலத்தின் ஊடாகாத் தான் விடுதலைப் போராட்டம் பலமான அமைப்பாக வளர்ந்து விரிந்துள்ளது.

தமிழீழவிடுதலைப்போராட்டம் 30ஆண் டு காலமாக வல்லரசுகளின் உதவியுடன் இயங்கும் இலங்கைப்படைகளுடன் எதிர் நின்று போரிட்டு வந்துள்ளது.

அக்கால கட்டத்தில் எல்லாம் போராட்டத் திற்கும் மக்கள் பலமாக கவசமாக இருந்ததால்த்தான் தமிழீழவிடுதலைப் போராட்டம் உலகத்தில் பேசப்படும் தேசிய போராட்டமாக மாறியுள்ளது.

அறவழிப் போராட்டமாக இருந்தாலும் ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் தமிழ் மக்களின் உரிமையாக தமிழீழம் தான் தீர்வு என்று உலகிற்குச் சொன்னவர்கள் எமது மக் கள்.

மக்கள் சக்தி ஒரே சக்தியாக இருக்கும் வரை எந்த வல்லரசாலும் எந்த வல்லாதிக்க சக்திகளாலும் எந்த விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்க முடியாது என்பது உலக வரலாறு எமக்குச் சொல்லும் பாடமாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக வியட்நாம் விடு தலைப்போராட்டத்தை பார்க்க முடியும் அந்த வகையில் தான் தமிழீழ விடுலைப்போராட்டமும் சிங்களப் பேரினவாத அரசுக்கு எந்த வல்லரசுகள் உதவி செய்தாலும் சிங்கள அரச பயங்கரவாதம் எந்த வடிவில் தமிழீழத் திற்கு வந்தாலும் அதற்கு முகம் கொடுத்து வெற்றி கொண்டவர்கள் எமது மக்கள் இது வரலாறு தந்த உண் மை.

யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த போது விடுதலைப்புலிகளின் பல வீனமாகி விட்டார்கள் என நினைத்தனர். அடுத்த கட்டமாக முல்லைத்தீவை வெற்றி கொண்டு மக்கள் விடுதலைப் புலிகளுக்கு துணையாக நிற்கின்றனர் என்று நம் உலகிற்கு ஒரு செய்தியைச் சொன்னோம். ஓயாத அலைகள் ஒன்றின் மூலம் மக்கள் போராளிகளோடு போராளிகளாக அணி திரண்டனர்.

ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு எதிராகவும் மக்கள்,டிக்கள் படையாக தென்மராட் சிக்குள்ளும் ஒட்டுசுட்டான், கிளிநொச்சி, மாங்குளம் பிரதேசத்திலும் சிங்களப் படைக்கு எதிராக நின்று பல வரலாற்றுச் சாதனைகளை படைத்தனர்.

ஓயாத அலைகள் -3 நடவடிக்கைகளில் சிங்களப்படைக்கு வரலாற்றுத்தோல்வியை ஏற்படுத்தியவர்கள் மக்கள் படையினர். இவர்களுக்கு வரலாறு உண்டு. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மென் மேலும் வளர்த்தெடுப் பதில் பக்க துணையாக இருந்து செயற்பட்டவர்கள் எமது மக்கள் படையினர் தான். இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மக் களின் ஆதரவு இருககும வரை அவாகளைத் தோற்கடிக்க முடியாது என்று குறிப்பிட் டது போல் இது நல்ல எடுகோலாக அமையும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மக்களிலி ருந்து அன்னியப் படுத்தலாம் என்று நினைத்து அவர்களால் முடியாமல் போனது.



மக்களும் புலிக ளும் ஒன்று தான் உலகத் தில் உள்ள இராஜதந்திரிகள் அனைவருக்கும் நன்கு தெரி யும். தமிழ் மக்கள் அனை வரும் எல்லாப்பலத்தினை யும் ஒருங்கிணைத்து எதி ரித்து ஒரே சக்தியாக தக்க பதிலடி கொடுக்க முடியும் என்பதை காட்டி நிற்கின் றது. மக்கள் அணி திரண்டு விடு தலையுடன் ஒன்றிணைந்து நிற்கும் வரை எந்த சக்தியாலும் எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

சிங்களத்தின் அரச படைகள் பலவீனமான நிலையில் தான் தற் போது அகலக் கால் வைத் துள்ளனர். இதன் எடுத்துக்காட் டாகவே இலங்கைப் படையினர் தீவிர படை சேர்ப்பில் ஈடுபட்டுள்ள னர். சிங்கள அரசியல் வாதி ஒருவர் "சிங்களப் படைப்புலிகளின் பொறிக்குள் கால் வைக்கின்றனர்" என்று குறிப்பிட்டுள் ளார்.

இது மீள முடியாத கால் வைப்பு என்று உலகில் உள்ள அனைவருக்கும் இது தெரியும் அவர்கள் பலவீனமான நிலையில் அகலக் கால் வைத்து வருகின்றனர். நல்ல பொறிக்குள் வருகின்றனர். இதனை எதிர்கொள்ள மக் கள் அனைவரும் மக்கள் படையாக எழுச்சி கொள்ள வேண்டும்.

எமது மக்களை அழித்தொழிப்பதில் சிங் களப்படையும் அரசும் கங்கணம் கட்டி நிற்கின் றன இதற்கு தக்க பதிலடி கொடுக்கும் காலம் இதுவாகும். சிங்களப்படையின் கொடூரத்திற்கு முடிவு கட்ட வேண்டும் எனில் கடந்த காலத்தைப் போன்று எமது மக்கள் அனை வரும் .அணி திரள வேண்டும் என்றார் அவர். (ஓ)

# தேர்தல் வன்முறைகள் அதிகரிப்புக்கு எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகளே காரணம்

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத்தேர்தல்கள் தொடர்பாக இடம்பெறும் வன் முறைச் சம்பவங்களை கண் காணிப் பதற்கென அனைத்துக்கட்சி நடவடிக்கை நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான நடைமுறையை பவ்ரல் அமைப்பு ஆரம்பித்துள்ளது.

கொழும்பில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் புணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ கருத்துத் தெரிவித்தார்.

மாகாண சபைத்தேர்தல்களில் வன்முறைகள் அதிகரிப்பதற்கு எதிர்க்கட்சியினரின் நடவடிக்கைகள் பங்களிப்பதாக பவ்ரல் அமைப்பு கூறுகிறது.

இருந்த போதிலும் அரசாங்கத்திற்கு சொந்தமான 8வாகனங்களுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட 163 முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ)

# தமிழக மீனவர்களின் பாதுகாப்பு தொடர்பாக சென்னை நீதிமன்றம் மத்தியரசுக்கு அழைப்பாணை

(சென்னை)

கச்சதீவு கடல் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களுக்கு இலங்கைப் படையினரிடம் இருந்து பாதுகாப்பு வழங்க உத்தரவிடக் கோரி தொடரப்பட்ட வழக்கில் மத்திய அரசுக்கு அழைப்பாணை அனுப்ப சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கச்சதீவுக்கு அருகில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களுக்கு மத்திய அரசு பாதுகாப்பு வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்தக் கோரியும் இந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சென்னை நீதிமன்றம் இது குறித்து மத்திய அரசுக்கு அழைப்பாணை அனுப்ப் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் வெள்ளிக் கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தமிழக்ச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஓ)

# இடம் பெயர்ந்த மக்களுக்கு அரசு தொடர்ந்து நிவாரணம் வழங்கும்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள சகல மக்களுக்கும் அரசாங்கம் தொடர்ச்சியாக நிவாரணங்களை வழங்கும் என அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்கவில்லை என சில ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் இடம் பெயர்ந்துள்ள 45ஆயிரம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக 260 லட்ச ரூபாவும், 8900 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் முன்னெடுக்கும் மனிதாபிமான யுத்தத்தை நிறுத்த வேண்டுமென சில அமைப்புக்கள் கோரிக்கை விடுப்பதாகவும், ஒரு போதும் அரசாங்கம் இதற்கு தலை சாய்க்காதெனவும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார். நிரந் தரத் தீர்வொன்று எட்டப்படும் வரை யுத்தம் தொடரும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போது அமைச்சர் இதனைத் தெரிவித் துள்ளார். (ஓ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி நேரடியாக மாகாண சபைகளுக்கு

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கும் நிதியை மாகாண சபைகளுக்கு நேரடியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் இம்மாதம் முதல் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாகவும் ஊடகத்துறை அமைச்சர் வக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

மகாவலி நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அமைச்சர் தொடர்ந்தும் கூறுகையில்,

மத்திய அரசாங்கம் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

ஆனால் மாகாண சபையின் கீழ் இருக்கும் பாதைகள் இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமலேயே காணப்படுகிறது.

மாகாண சபைகளுக்கு போதியளவு நிதி கிடைக்காமையே இதற்கான காரணமாகும்.

எனவே ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கும் நிதி அனைத்தையும் மாகாண சபைகளுக்கு நேரடியாக வழங்கி அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஓ)

# படையினரின் தேடுதலில் புத்தளம் பதுளை பகுதிகளில் 25 தமிழர் கைது

(கொழும்பு)

இலங்கை படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளால் போது 25 தமிழ் பொது மக்கள் உள்ளடங்கலாக 35 பொது மக்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஐந்து தமிழ் இளைஞர்கள் பதுளைக் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் ஏனைய 30 பேரும் புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

கைது செய்யப்பட்ட தமிழ் பொது மக்கள் புத்தளம் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஏனைய கைது செய்யப்பட்ட பொதுமக்கள் பெருபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

**APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS**

The applications are called for training of counsellors. This is a one year, week - end (Saturdy & Sunday) course that consists of 450 hours. The applicants should have the follwing prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 50 years
4. Interested in Social Activities

The applicants will have to buy the special application form at our office and submit them before the 6th of September. Only 25 applicants will be selected to follow this trainig.

For further details please contact:

"AHAVOLI"
INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY
Affiliated to National University of Ireland, Galway
St. Patrick's Road, Jaffna.
Contact No :- 021-222-2856

ஓநாய்க்கு கருணை காட்டுவது–ஆட்டுக் குட்டிக்குக் கொடுமை செய்வதாகும்.

– ஆப்கானிஸ்தான்

வலம்புரி

## யாழ்.பல்கலைக்கழகத்திற்கு புதிய மாணவர்களை அனுமதிக்குக

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட சிங்கள மாணவர்கள் தமக்கான அனுமதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தாம் கற்கக் கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்று தெரிவித்தும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைத் தெரிவு செய்வதில் தாம் முன்னுரிமை வழங்கவில்லை என்று கூறியும் அந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்களுக்கு ஆதரவாக அவர்களின் பெற்றோர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான சூழமைவு தற்போது இல்லை எனத் தெரிவித்திருக்கும் சிங்கள மாணவர்களின் கோரிக்கைக்கு அரசு செவி சாய்த்து அவர்களைத் தென்பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்ளும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

ஆக, சிங்கள மாணவர்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதன் மூலம் வடக்குக் கிழக்குத் தமிழ்–முஸ்லிம் மாணவர்களுக்கான அனுமதியைத் தடுப்பதும் பின்னர் சிங்கள மாணவர்களைத் தென் பகுதிப் பல்கலைக்கழகங்களில் இணைப்பதும் உள்நோக்கம்.கொண்ட நடவடிக்கைகளாகும்.

எனவே அரசின் இத்தகைய உள்நோக்கங்கள் இன ஒற்றுமைக்குப் பாதகமாக அமையும் என்பது உணரப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதியை மாற்றித் தருமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் சிங்கள மாணவர்களுக்குத் தென் பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் அனுமதியைக் கொடுக்கும்போது,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்படக் கூடிய வெற்றிடங்களுக்கு வடக்குக் கிழக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுவே தமிழ் மாணவர்களுக்கு அரசு தனது நேர்மைத் தனத்தைக் காட்டுவதாக அமையும்.

மாறாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு நியமிக்கப்பட்ட சிங்கள மாணவர்களுக்குப் பல்கலைக்கழகங்களை மாற்றிக் கொடுத்து விட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெற்றிடத்தை அப்படியே விட்டுவிடுவது கல்விச் சமூகத்திற்குச் செய்யும் அநீதியாகும்.

# சைவம் வளரப் பாடுபட்டுழைக்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## இன்று பீடாரோஹண விழா



சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்

சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தம்மாலான முயற்சிகளை முன்னெடுத்து நிற்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று பீடாரோஹண விழா.

கதாப்பிரசங்கம் செய்தே சமயப் பணியாற்றிய ஸ்ரீலஸ்ரீசுவாமிநாதர் தேசிக ஞானசம்பந்தர் பராமசார்ய சுவாமிகளால் 1966ஆம் ஆண்டு நல்லைக் கந்தனின் கார்த்திகைத் திருநாளில் ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆதினம் வெகு சிறப்பாகத் தனது சேவையை ஆற்றிவருகின்றது .மக்களை நல்வழிப் படுத்தும் முகமாக பண்ணிசை வகுப்புகள், பாலர் வகுப்புகள், சங்கீதம், மிருதங்கம், வயலின் வகுப்புகள், கோலப்பயிற்சி வகுப்புகள், தையல் பயிற்சி வகுப்புகள் என்று இன்னோரன்ன பல விசேட வகுப்புகளை நடத்தி மக்கள் சேவையாற்றுகின்றது.

அது மாத்திரமன்றி சமய தீட்சை, பஜனை, கூட்டுப் பிரார்த்தனை, புராண படனம் என்பவற்றையும் அவ்வப்.போது திறம்பட நடத்தி அரிய பணிபுரிகிறது. மேலும் சைவநாயன் மார்களின்குரு பூசைகளையும் விசேட அற்புத விழாக்களையும் சிறப்புற நடத்தி சைவசமயத்தின் அருமைபெருமைகளை மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றது. நல்லூர்க்கந்தன் மஹோற்சவ விழா நாள்களில் வீதிபஜனை, திருமுறை பாராயணம், அன்ன தானம் என்பனவற் றைத் தெளிவாக அமைதியாக நடத்தி யும் வருகிறது.

ஆலய மகாகும் பாபி ஷேகம் மற்றும் விசேட விழாக்களில் பங்கு பற்றும் சுவாமிகள் நல் லாசி வழங்கி மக்கள் நன்னெறியில் வாழ உதவுதல் மகத்தான சேவையாகும். எல்லோராலும் *மணி ஐயா* என்று அன்போடு அழைத்த முதலாவது குருமஹா சந்நிதா னம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஈழநாட்டில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலாய இடங்களிலும் கதாப்பிரசங்கம் மூலம் சைவம் வளர அரும் பாடுபட்டதை உலகறியும்.

தற்போது இவ்வாதீன இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பராமாச் சாரிய சுவாமிகள் தொடர்ந்து இப்பணியை செவ்வனே மேற்கொண்டுவருகின்றனர்.

இன்றைய பீடா ரோஹண விழாவில் சுவாமிகளுக்கு விசேட பூசை நடைபெற்று நல்லையம்பதி முருகனின் திருவீதி வலம் வந்து குத்துவிளக்கு, பூரண கும்பம் வைத்து வரவேற்று மாலை சூட்டி அருளாசி வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

### கிழக்கு பல்கலை மாணவன் கொலை

## சிங்கள மாணவர்கள் வெளியேற்றம் மாணவ தலைவர் உட்பட மூவர் கைது

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கழைக்கழகத்தில் கற்கை நெறிகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரும்வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர். வி. பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்று இரவு சிங்கள மாணவன் சுட்டுக் கொல்லப் பட்டதையடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பாதுகாப்பு தரப்பினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள 180க்கும் மேற்பட்ட சிங்கள மாணவர்களை பொலிஸ் பாதுகாப்புடன் பொலநறுவை மாவட்டத்திற்கு அழைத்து சென்று அங்கிருந்து அவர்களின் சொந்த வீடுகளுக்கு செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக விவசாய பீடத்தில் மூன்றாம் வருட மாணவ தலைவர் எஸ். சசிகரன் வயது 25, விடுதியில் கடமைபுரியும் முரளிதரன் மற்றும் விடுதியில் காவல் கடமையில் ஈடுபட்ட இரு காவலாளிகள் ஏறாவூர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஓ

## 'கிழக்குப் பல்கலைக்கழகம் மரண வீடு' முன்பே அச்சம் வெளியிட்டிருந்த தாயார்

கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு பெரும்பான்மை இன மாணவர் ஒருவரை அனுமதி த்துவிட்டுத் திரும்பியிருந்த அவரின் தாயார் மரண வீட்டில் தனது பிள்ளையை விட்டு வந்ததைப் போன்றிருப்பதாக அண் மையில் பி.பி.சிக்கு கூறியிருந்தார்.

இவ்வாறு அவர் கூறி ஒரு மாத காலத்துக்குள்ளேயேகிழக்குப் பல்கலைக்கழகத்தில் பெரும்பான்மை இன மாணவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

எனது பிள்ளையை மரண வீடொன்றில் விட்டுவிட்டு வந்ததாகவே நான் நினைக்கிறேன் இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டுஎனது பிள்ளையைப்படிப்பித்தது இவ்வாறான தொரு இடத்தில் பெரும் அச்சத்துக்கு மத்தியில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு அல்ல என கிழக்குப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் தனது மகனை அனுமதிக்கச் சென்றிருந்த அந்தத்தாயார் பி.பி சி.செய்திச் சேவைக்குத் தன்து கவலையைத் தெரியப்படுத்தியிருந்தார்.

யாழ் பல்கலைக்கழகத்தில் சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்து அவர்களது பெற்றோர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னாள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர். இது தவிரவும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய கடிதமொன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அண்மையில் அனுப்பிவைத்திருந்தனர். ஓ

## யாழ். மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் பெரும்பான்மை இன மாணவர்கள் தாக்கப்படுகின்றனர்

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களில் பயிலும் சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களால் தொல்லைகளுக்கு உள்ளாவதாக ஜாதிக ஹெல உறுமய வியாழக்கிழமை குற்றஞ் சாட்டியிருந்தார்.

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் மாத்திரமே இவ்வாறான பிரச்சினைக்கு முகம் கொடுப்பதாகவும் அங்கிருக்கும் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு எந்தப்பிரச்சினையும் இல்லை எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

அந்தப்பல்கலைக்கழகங்களிலுள்ள சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களால் தாக்கப்படுவதாகவும் அவ்வாறு கிழக்குப்பல்கலைக்கழகத்தில் தாக்கப்பட்ட மாணவர்களை ஜாதிக ஹெலஉறுமய அடையாளம் கண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் எந்த இனத்தைச் சேர்ந்த மாணவரும் அனுமதிக்கப்படலாம் என அரசாங்கத் தரப்பில் நியாயம் கூறப்படுகின்ற போதும் ,தற்போது வடக்கு ,கிழக்கில் நிலவும் சூழ்நிலையால்,சிங்கள மாணவர்களை அங்கு அனுமதிப்பதானது தமது பல்கலைக்கழகங்களை ஆக்கிரமிக்கும் அரசாங்கத்தின் திட்டமாக இருக்கலாம் என தமிழ் ,முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஓ

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும் 79

ஓலைச் சுவடி

### நீளவாட்டமாக கிழிந்த வெற்றிலை பயன்படுத்தலாமா?


வெற்றிலைக் கொடியை மிகத் தூய்மையானதாக முன் தலைமுறை கண்டிருந்தது. எல்லா சுப காரியங்களுக்கும் வெற்றிலையும் பாக்கும் மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. வெற்றிலையைச் சுற்றி அனேக நம்பிக்கைகளுண்டு. மாதவிடாய் நாட்களில் வெற்றிலை கிள்ளுவது தடைசெய்யப்பட்டிருந்தது. அஷ்டமங்கல்யவஸ்துக்களில் தேவீ தேவர் மாரை உட்கொள்ளுவதாம் வெற்றிலை.

அதன் தலையில் மகாலட்சுமியும் மத்தியில் சரஸ்வதியும் வசிப்பதாக நம்புகின்றனர். மேலும் காம்பில் மூத்த பகவதியும் இடது பக்கம் பார்வதியும் வலது பக்கம் பூ தேவதையும் உட்பாகம் விஷ்ணுவும் வெளிபாகத்தில் சிவனும் வசிக்கின்றனராம். மேலும் சுக்கிரன், சூரியன், தேவேந்திரன் ,காமதேவன் என்பவரையும் சுத்தமான வெற்றிலை உட்கொள்ளுவதாக விசுவாசிக்கின்றனர்.

வெற்றிலை பயன்படுத்துவதைப் பற்றியும் சில நம்பிக்கைகளுண்டு. இரண்டாக நீளவாட்டமாக கிழிந்த வெற்றிலை பயன்படுத்துவது மிகத் தீங்கான விசயமாக கருதுகின்றனர். மேலும் துவாரமுள்ள வெற்றிலை உலர்ந்த இலை, காரமான வெற்றிலை என்பவை உபயோகிக்க கூடாது. விரத நாட்களில் வெற்றிலை போடுவதை தவிர்க்குமாறு ஆசா ரிய விதி கூறுகின்றது. காலையிலும் நண்பகளிலும் மாலையிலும் வெற்றிலை, பாக்கு மெல்லுவது ஐசுவரியம் என்றும் கூறுகின்றனர். ஆனால் புகையிலை சேர்ப்பது தீங்காணது என்று நவீன விஞ்ஞானம் சுட்டிக்காட்டுகின்றது.

# யாழ். மாவட்டத்தில் வலைப்பந்தாட்ட

வலைப்பந்தாட்டமானது பெண்களால் விரும்பி விளையாடப்படும் ஒரு ஆட்டமாகும். இவ் வலைப்பந்தாட்டமானது 1890ஆம் ஆண்டு அமெரிக்காவை சேர்ந்த சில மகளிரி



னால் தோற்றுவிக்கப்பட்டது.

1963ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் போட்டிகள் நடைபெற்றது. தொடர்ந்து உலகளாவிய ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்டு வலைப்பந்தாட்ட தொடரானது 4 வருடங்களிற்கு ஒருமுறை நடாத்தப்படுகின்றது. 1998இல் இவ் விளையாட்டிற்கான விதிகள் சீராக்கம் செய்யப்பட்டு ஒரு குழுவில் 12பேர் இடம்பெறலாம் என அறிவிக்கப்பட்டது.

இலங்கையை பொறுத்தவரை 1921ஆம் ஆண்டு ஜெனிகிறீன் என்பவரினால் கண்டி பெண்கள் உயர்கல்லூரி மாணவர்களிற்கு முதன் முதலாக வலைப்பந்தாட்டமானது அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. பின்னர் கண்டியிலுள்ள வேறொரு பாடசாலை இதனை கற்றுக் கொண்டது. இவ் இரண்டு பாடசாலைக்கும் இடையில்தான் முதன் முதலில் வலைப்பந்தாட்ட போட்டிகள் இலங்கையில் நடைபெற்றது. பின்னர் கொழும்பு ,நீர்கொழும்பு ,யாழ்ப் பாணம் போன்ற பாடசாலைகளிற்கும் இவ்விளையாட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் 1927ஆம் ஆண்டு யாழ்.வேம்படி மகளிர் உயர்கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ,உடுவில் மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளில் வலைப்பந்தாட்டமானது கண்டி பெண்கள் உயர்கல்லூரிக் குழுவின் உதவியுடன் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இதன் பின் னர்தான் மாவட்ட, மாகாணமட்டங்களிலான போட்டிகள் ஆரம்பமாகின. அத்துடன் பாடசாலையை விட்டு விலகிச்சென்ற மாணவர்கள் விளையாட்டு கழகங்கள் ஊடாக இதனை வளர்த்தனர்.

கொழும்பில் "கொழும்பு வலைப்பந்தாட்ட பிரிவு ஒன்றை உருவாக்கி அதனூடாக இதனை வளர்த்தனர். பின்னர் தனியார் நிறு வனங்கள் ஒன்று சேர்ந்து வலைப்பந்தாட்ட கட்டுப்பாட்டு குழு ஒன்றை உருவாக்கினர். இதன் மூலமாக வெளிப்பிரதேசங்களிற்கு இவ் விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. வலைப் பந்தாட்ட சங்கங்கள் உருவாக ஊக்க மளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இவ் வலைப்பந்தாட்ட சங்கமானது 1983ஆம் ஆண்டு விளையாட்டு அமைச்சின் உதவியுடன் செல்வி கனகேஸ்வரி வைத்திலிங்கம், திருமதி A.F. ரூப

## யாழ்.விளையாட்டுகளம்

சிங்கம் ஆகியோருடைய கடின முயற்சி மூலம் இச்சங்கம் உருவாக்கப்பட்டது. அப் போது அச்சங்கத்தின் தலைவியாக செல்வி கனகேஸ்வரி வைத்திலிங்கம் கடமையாற் றினார்.

யாழ்ப்பாண வலைப்பந்தாட்ட பின்னணியில் யாழ்ப்பாண வலைப்பந்தாட்ட சங்கமானது முக்கிய பங்கினை வகிப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது யாழ்ப்பாணத்தில் ஒழுங்கமைக்கப் பட்ட கட்டுக்கோப்பான வலைப்பந்தாட்த்தை விளையாட இச்சங்கமே முக்கிய காரணமாகும்.

இவ் வலைப்பந்தாட்ட சங்கமானது பல கழகங்களையும் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தையும் அங்கத்தவர்களாகவும் கொண்டு இயங்கி வருகின்றது. இவ் மத்தியஸ்தர் சங்கமானது 1999ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இம் மத்தியஸ்தர் சங்கமானது திறமையான மத்தியஸ்தர்களை உருவாக்கி அதனூடாக வலைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு உதவி புரிகின்றது. இச் சங்கமானது மத்தியஸ்தர் களிற்கான பரீட்சையை நடாத்தி மத்திய ஸ்தர்களின் தரத்தினையும் உயர்த்தி வருகின்றது. 2005ஆம் ஆண்டு மத்தியஸ்தர்களிற் கான பரீட்சையில் A grade ல்3பேர் சித்தியடைந்

## வளர்ச்சியின் பின்னணி

தனர். திருமதி A.F ரூபசிங்கம், A.ராதை அருளம்பலம், சுரேந்தினி சிதம்பரநாதன் இவர்கள் யாழ்.மாவட்டத்தில் சிறந்த மத்தியஸ்தர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ் மத்தியஸ்தர்கள் கோட்டமட்ட, வலய மட்ட போட்டிகளில் மத்தியஸ்தம் வகித்தும் கழகங்களிற்கிடையிலான போட்டிகளிலும் மத்தியஸ்தம் வகித்தும் தமது தரத்தினை மேலும் உயர்த்தி வருகின்றனர்.

மேலும் இவ் வலைப்பந்தாட்ட சங்கமானது பல்வேறு பீடசாலைகளில் இருந்தும் கழகங்களில் இருந்தும் சிறந்த வீராங்கனைகளை தெரிவுசெய்து அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக சிறந்த யாழ்.மாவட்ட அணியினரை பயிற்றுவித்து வருகின்றது. இவ் அணியானது ஒரு சிறந்த அணியாகவும் விளங்குகின்றது. இவ் மாவட்ட அணியில் விளையாடிய வீராங்கனை ஜெயந்திரி சோமசுந்தரம் தேசிய அணிக்கு தெரிவுசெய்யப்பட்டு 2001ஆம் ஆண்டு நடைபெற்ற world cup tournament ல் அணித் தலைவியாக தேசிய அணியினை வழிநடத்தினார். இவ்வாறு யாழ்.வலைப்பந் தாட்ட சங்கமானது வலைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக காணப்படுகின் றது. தற்போது இச்சங்கத்தின் தலைவியாக திருமதி A.F ரூபசிங்கம் அவர்கள் தலைமை வகிக்கின்றார்.

யாழ்.மாவட்ட அணியானது 1979ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்டத்திலான போட்டியில் பங்குபற்றி 1ஆம் இடத்தையும், 1989ஆம் ஆண்டு 2ஆம் இடத்தையும் பெற்று யாழ்.மாவட்ட அணியின் தரத்தை உயர்த்தி யது இவ்விளையாட்டு. பெண்களே பெரும் பாலும் ஈடுபட்டாலும் ஆண்களும் இதில் மிகவும் ஈடுபாடு உடையவர்களாக காணப்படுகின்றனர்.

ஆண் களுக்கும், பெண்களுக்கும் இணைந்து ஒரு குழுவாக விளையாடும் முறை முதன் முதலில் 2004ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு இலங்கை வலைப் பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் யாழ்.அணியானது பங்குபற்றி 1ஆம் இடத்தை பெற்றது. இதில் சிறந்த களத் தடுப்பு வீரராக அகிலன் சூடாமணியும் சிறந்த Shooterல் ஆக க.விஜிதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் போட்டிகளிலும் பாடசாலை அணிகள் மிகவும் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மட்டத்தில் பெண்கள் மத்தியில் மிகவும் விரும்பப்படுகின்ற ஒரு விளையாட்டாக வலைப்பந்தாட்டமானது காணப்படுகின்றது.

வேம்படி மகளிர் கல்லூரி. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. உடுவில் மகளிர் கல்லூரி என்பவற்றிற்கு வலைப்பந்தாட்த்தைப் பொறுத்தவரை நீண்டதொரு வரலாறும் காணப்படுகின்றது. இரு பாடசாலைகளிலும் மைதான வசதி. பயிற்றப்பட்ட விளையாட்டுத் துறை ஆசிரியர்கள். விடுதி வசதிகள் என்பவற் றுடன் பாடசாலையின் விளையாட்டுத்துறை அபிவிருத் தியில் ஆர்வம் கொண்ட அதிபர் களை

**செல்வி பிரதீபா செல்லத்துரை**
முதலாம் வருட மாணவி
விளையாட்டு விஞ்ஞான அலகு
யாழ்.பல்கலைக்கழகம்

கொண்டதாக இப்பாடசாலை கள் காணப்படுகின்றன. கல்விக்கு கொடுக்கும் அதே முக்கியத்து வத்தை தமது பாடசாலை விளையாட்டுத்துறைக்கும் கொடுத்தார்கள். மாணவர்களிற்கு தேவையான வசதிகளை வழங்கினார்கள். யாழ்.மாவட்டத்திற்கு வலைப் பந்தாட்டமானது அறிமுகமான காலப்பகுதி யில் இருந்து இப் பாடசாலைகள் இவ் விளையாட்டில் ஆர்வம் கொண்டு தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டிகளிலும் பங்குபற்றின.


(தொடரும்)

# 153 பேரைப் பலி கொண்ட ஸ்பெயின் விமான விபத்து

## 3 நாட்கள் துக்கதினம்

(மட்றித்)

ஸ்பெயினின் தலைநகர் மட்றித்திலுள்ள பராஜஸ் விமான நிலையத்திலிருந்து கனேரித் தீவுகளுக்குப் புறப்பட்ட பயணிகள் விமான மொன்று புதன்கிழமை விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 153பேர்



பலியாகியுள்ளனர்.

166 பயணிகளுடனும் 9 விமான ஊழியர்களுடனும் விமான நிலையத்திலிருந்து மேலேழுந்த வேளையிலேயே ஸ்பானெயார் விமானசேவை நிறுவனத்துக்கு சொந்தமான ஜே.கே.5022 விமானமானது விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விமான விபத்தை யடுத்து 3 நாள் உத்தியோகபூர்வ துக்கதினம் மட்றித்தில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இவ்விபத்தில் 19பேர் காயமடைந்த நிலையில் உயிரிபிழைத் துள்ளதாக ஸ்பெயினின் போக்குவரத்து அமைச்சர் மக்தலெனா அல்வா ரெஸ் தெரிவித்தார்.

மேற்படி விமான மானது தொழில்நுட்ப கோளாறு கள் காரணமாக ஒரு மணி நேர தாமதத்தின்பின்பே புறப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் இவ்விபத்துக் கான காரணத்தை கண்டறிய அவ்விமான சிதைவுகளிலிருந்து மீட்கப்பட்ட விமான தரவு மற்றும் குரல் பதிவு கருவிகளை இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள அதிகாரிகள். ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த விமானத்தின் இயந்திரங்களில் ஒன்றில் ஏற்பட்ட தீயே இந்த விபத்துக்கு காரணமென ஆரம்ப கட்டத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் மேற்படி விமானத்தில் விபத்து இடம்பெற்ற போது 20சிறுவர்களும் 2கைக் குழந்தைகளும் இருந்ததாக கூறப் படுகிறது. அதேச மயம் உயிர் பிழைத்த 19 பேரில் 6வயது, 8 வயது மற்றும் 11வயதுடைய 3 சிறுவர்கள் உள்ளடங்

## உலக தரிசனம்

குகின்றனர்.

இந்த விபத்தில் ஜேர்மனி, சுவீடன், சிலி மற்றும் கொலம்பிய நாட்டுப் பிரஜைகள் உட்பட வெளிநாட்டவர்கள் பலர் உயிரிழந்துள்ளதாக ஸ்பெயின்செய்திஊடகமொன்று அறிக்கையிட்டுள்ளது. 15வருட கால பழைமையான மேற்படி விமானம் விபத்துக்குள்ளானதற்கு ஸ்பானெயாரின் அலட்சியமான செயற்பாடே காரணம் என உயிரிழந்த பயணிகளின் உறவினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

1983ஆம் ஆண்டு மட்றித்தில் கொலம்பிய விமான சேவைக்கு சொந்தமான போயிங் 747 விமானம் விபத்துக்குள்ளானதில் 181 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## குற்றத்தை ஒப்புக்கொண்ட மதகுரு வில்லியம் கிறீன்

அமெரிக்கா மான்செஸ்டர் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த 27 சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய அருட்தந்தை ஒருவர் தன்து குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். 1970ஆம் ஆண்டுகளிலும் 1980ஆம் ஆண்டுகளிலும் 8 வயதிற்கும் 16வயதுக்கும் இடைப்பட்ட மேற்படி சிறுவர்களை துஷ்பிர யோகம் செய்ததாக அருட்தந்தை வில்லியம் கிறீன் (வயது 67) மான்செஸ்டர் நீதிமன்றத் தில் ஏற்றுக்கொண்டார்.

மான்செஸ்டர் சென்.பெடஸ் கல்லூரியில் பௌதீக ஆசிரியராக கடமையாற்றிய மேற்படி அருட்தந்தைக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 30ஆம் திகதி இறுதித் தீர்ப்பளிக்கப்படவுள்ளது. (ஓ-6)

# தற்கொலை குண்டு தாக்குதல்கள் பாகிஸ்தானில் 63 பேர்வரை பலி

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு வெகு அருகிலிருக்கும் நாட்டின் முக்கிய ஆயுத தொழிற்சாலைக்கு அருகே இடம் பெற்ற இரட்டை தற்கொலைத்தாக்குதலில் குறைந்தது 63 பேராவது கொல்லப்பட்டிருப்பதாக பாகிஸ்தானிய பொலிசார் கூறுகிறார்கள். இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர்.



வாஹ் நகரில்லுள்ள இந்த ஆயுதத் தொழிற்சாலையின் முக்கிய வாயிலுக்கு எதிரே ஒரு தற்கொலை குண்டுதாரி தன்னைத் தானே வெடிக்க வைத்துக் கொண்டார் எனவும் பாகிஸ்தானிய பொலிசார் தெரிவிக்கிறார்கள்.

மற்றொரு வாயிலுக்கு அருகே இருந்த சந்தைப் பகுதியில் இரண் டாவது தற்கொலைத் குண்டுதாரியின் வெடிப்பு நிகழ் ந்துள்ளது.

பாகிஸ்தானிலுள்ள தலிபான்களுக்காக பேசவல்ல ஒருவர் அந்நாட்டின் பழங்குடிகள் பகுதிகளில் தமக்கு எதிராக இராணுவம்நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாகத்தான் இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன என்று கூறியுள்ளார். (ஓ-6)

## ஜமெக்கா ஆதிக்கம் தொடர்கிறது பெண்கள் 200 மீ. ஓட்டத்தில் தங்கம்

ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் ஜமெக்கா முழு ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமெக்காவின் வெரானிகா கேம்பெல் தங்கம் வென்று சாதித்தார்.

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமெக்காவின் வெரானிகா கேம்பெல், ஷரோன் சிம்சன், அமெரிக்காவின் முனா லீ உள்ளிட்ட முக்கிய வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்திலே சிறப்பாகச் செயற்பட்ட ஜமெக்காவின் வெரானிகா 21.74 விநாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கம் வென்றார்.

[illegible] தை அமெரிக்காவின் [illegible]. வெண்கலத்தை ஜமைக்கா [illegible] ஸ்டுவர்ட்டும் கைப்பற்றினா.

## சைக்கிள் போட்டியில் லற்வியா வீரர் முதலிடம்

ஒலிம்பிக்கில் நேற்று சைக்கிள் பி.எம்.எக்ஸ். பிரிவுப் போட்டி நடந்தது. இதில் ஆண்கள் பிரிவில் லற்வியா நாட்டு வீரர் ஸ்டிரோம் பெர்க் தங்கப் பதக்கம் பெற்றார். அமெரிக்க வீரர் டேமைக் வெள்ளிப் பதக்கத்தையும் மற்றொரு அமெரிக்க வீரர் ரொபின்சன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் பிரான்ஸ் வீராங்கனை ஜோசன் தங்கப் பதக்கத்தையும் மற்றொரு பிரான்ஸ் வீராங்கனை லிபாட்டியா வெள்ளிப் பதக்கத்தையும் அமெரிக்க வீராங்கனை கின்டர்சிங் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

## கடற்கரைக் கைப்பந்து அமெரிக்காவுக்குத் தங்கம்

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் நேற்றுக் காலை தங்கப் பதக்கத்துக்கான ஆண்கள் கடற்கரைக் கைப்பந்து போட்டி நடந்தது.

இதில் அமெரிக்கா - பிரேசில் அணிகள் மோதின. அமெரிக்க வீரர்கள் அபாரமாக ஆடி 23-11, 17-21, 15-04 என்ற செட்டில் [illegible] தங்கப் பதக்கத்தைத் தட்[illegible]றனர்.

அமெரிக்க அணியில் ரோஜர்ஸ், தலூசர் ஆகியோரும் பிரேசில் அணியில் மார்சியோ, பாபியோ ஆகியோரும் ஆடினார்கள்.

இதன்மூலம் வெள்ளிப் பதக்கம் பிரேசில் அணிக்கு வழங்கப்பட்டது. வெண்கலப் பதக்கத்திற்கான போட்டியில் பிரேசில் நாட்டில் இன்னொரு அணியும் ஜோர்ஜியாவும் மோதின.

பிரேசில் அணியில் ரிகார்டோ, இமானுவேல் ஆகியோரும் ஜோர்ஜியா அணியில் கியார், ஜியோ ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இதில் பிரேசில் அபாரமாக ஆடி 21-15, 21-10 என்ற நேர் செட்டுகளில் வென்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.




## ஒலிம்பிக் வரலாற்றில் இந்தியாவுக்கு குத்துச் சண்டையில் முதல் பதக்கம்

பீஜிங் ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு மேலும் ஒரு வெண்கலத்தை குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் குமார் பெற்றுத் தந்தார். இது ஒலிம்பிக் வரலாற்றின் குத்துச் சண்டைப் பிரிவில் இந்தியா பெறும் முதல் பதக்கமாகும்.



நேற்று நடந்த அரையிறுதிப் போட்டியில் விஜேந்தர்குமார் கியூபா வீரரிடம் தோற்றாலும் இந்தியாவுக்கு வெண்கலம் கிடைத்துள்ளது. இத்துடன் பீஜிங் ஒலிம்பிக்கில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெண்கலம் என மூன்று பதக்கங்களைப் பெற்றுள்ளது.

குத்துச் சண்டைப் போட்டிகளில் இந்தியா எப்போதும் இல்லாத வகையில் பீஜிங் ஒலிம்பிக்கில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. அகில் குமார், ஜிதேந்தர்குமார் ஆகியோர் காலிறுதிப் போட்டிகளில் தோற்று வெளியேறினர்.

75 கிலோக்கிராம் பிரிவில் இந்தியாவின் விஜேந்தர் சிங் காலிறுதியில் ஈகுவடாரின் கார்லஸ் காங்கோராவை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். நேற்று நடந்த அரையிறுதியில் கியூபாவின் எமிலியோ கோரியாவுடன் மோதினார்.

இதில் வெற்றி பெறும் பட்சத்தில் தங்கம் அல்லது வெள்ளி பதக்கம் கிடைக்கும் ஒரு வேளை தோல்வியடைந்தால் வெண்கலம் கைப்பறலாம் என்ற நிலையில் மிகுந்த எதிர்பார்ப்பில் போட்டி ஆரம்பமானது.

முதல் சுற்றில் கியூபா வீரர் 2:0 என முன்னிலை பெற்றார். 2-வது சுற்றில் கியூபா வீரரரை விட அதிக புள்ளிகள் பெற்றார் விஜேந்தர். 3-வது சுற்றில் இந்திய வீரர் மோசமாக ஆட 7:3 என முன்னிலை பெற்று 4-வது சுற்றிலும் தொடர்ந்து 8:5 என்ற முன்னிலையுடன் கியூபாவின் எமிலியோ கோரியோ வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## பாலா

### விதியை வென்ற வீரன்

ஆண்கள் 10 கி.மீ. மரதன் நீச்சலில் நெதர்லாந்து வீரர் மார்டின் வாண்டெர் வெய்ஜ்டென் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

கடந்த 7 ஆண்டுகளாக ரத்தப் புற்றுநோயால் அவதிப்படும் இவர், ஸ்டெம் செல் மாற்றுச் சிகிச்சை மற்றும் கதிரியக்க சிகிச்சையுடன் நோயை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வருகின்றார்.



ஒலிம்பிக் போட்டியில் மன உறுதியுடன் கலந்து கொண்ட அவர், தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். பந்தய தூரத்தை அவர் ஒரு மணி 51 நிமிடம் 51 விநாடியில் கடந்தார்.

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 47 | 17 | 25 | 89 |
| அமெரிக்கா | 31 | 36 | 35 | 102 |
| பிரித்தானியா | 18 | 13 | 13 | 44 |
| ரஷ்யா | 17 | 18 | 22 | 57 |
| ஜேர்மனி | 14 | 9 | 13 | 36 |
| அவுஸ்திரேலியா | 12 | 14 | 16 | 42 |
| கொரியா | 11 | 10 | 7 | 28 |
| ஜப்பான் | 9 | 6 | 10 | 25 |
| இத்தாலி | 7 | 8 | 10 | 25 |
| நெதர்லாந்து | 7 | 5 | 4 | 16 |
| ஜமேக்கா | 6 | 3 | 1 | 10 |
| பிரான்ஸ் | 5 | 13 | 16 | 34 |
| உக்ரைன் | 5 | 4 | 12 | 21 |
| ஸ்பெயின் | 4 | 6 | 2 | 12 |
| பெலாரஸ் | 4 | 4 | 8 | 16 |
| ரோமேனியா | 4 | 1 | 3 | 8 |
| கனடா | 3 | 8 | 6 | 17 |
| போலந்து | 3 | 4 | 1 | 8 |
| செக்குடியரசு | 3 | 3 | - | 6 |
| சுலோவாக்கியா | 3 | 2 | 1 | 6 |
| நியூசிலாந்து | 3 | 1 | 5 | 9 |
| எதியோப்பியா | 3 | 1 | 1 | 5 |
| ஜோர்ஜியா | 3 | - | 3 | 6 |
| கியூபா | 2 | 6 | 11 | 19 |
| கென்யா | 2 | 4 | 2 | 8 |
| பிரேஸில் | 2 | 3 | 7 | 12 |
| டென்மார்க் | 2 | 2 | 3 | 7 |
| வடகொரியா | 2 | 1 | 3 | 6 |
| சுவிட்சர்லாந்து | 2 | - | 3 | 5 |
| ஹங்கேரி | 1 | 5 | 2 | 8 |
| கஜகஸ்தான் | 1 | 4 | 6 | 11 |
| துருக்கி | 1 | 4 | 3 | 8 |
| நோர்வே | 1 | 4 | 2 | 7 |
| சிம்பாவே | 1 | 3 | - | 4 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 4 | 7 |
| உஸ்வெகிஸ்தான் | 1 | 2 | 3 | 6 |
| சுலோவேனியா | 1 | 2 | 2 | 5 |
| பல்கேரியா | 1 | 1 | 3 | 5 |
| இந்தோனேசியா | 1 | 1 | 3 | 5 |
| பின்லாந்து | 1 | 1 | 1 | 3 |
| எஸ்தோனியா | 1 | 1 | - | 2 |
| மொங்கோலியா | 1 | 1 | - | 2 |
| போர்த்துக்கல் | 1 | 1 | - | 2 |
| தாய்லாந்து | 1 | 1 | - | 2 |
| ஆர்ஜென்டீனா | 1 | - | 3 | 4 |
| இந்தியா | 1 | - | 2 | 3 |
| ஈரான் | 1 | - | 1 | 2 |
| லற்வியா | 1 | - | 1 | 2 |
| மெக்சிக்கோ | 1 | - | 1 | 2 |
| பஹ்ரெய்ன் | 1 | - | - | 1 |
| கமரூன் | 1 | - | - | 1 |
| பனாமா | 1 | - | - | 1 |
| தனிசியா | 1 | - | - | 1 |
| சுவீடன் | - | 4 | 1 | 5 |
| லிதுானியா | - | 2 | 3 | 5 |
| ரினிடிடாட் | - | 2 | - | 2 |
| குரோசியா | - | 1 | 3 | 4 |
| ஆஸ்திரியா | - | 1 | 2 | 3 |
| கிரீஸ் | - | 1 | 2 | 3 |
| அல்ஜீரியா | - | 1 | 1 | 2 |
| கொலம்பியா | - | 1 | 1 | 2 |
| கர்கிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| செர்பியா | - | 1 | 1 | 2 |
| தஜிகிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| பெல்ஜியம் | - | 1 | - | 1 |
| சிலி | - | 1 | - | 1 |
| டமோனிக்கன் | - | 1 | - | 1 |
| ஈகுவடார் | - | 1 | - | 1 |
| மலேசியா | - | 1 | - | 1 |
| தென்னாபிரிக்கா | - | 1 | - | 1 |
| சிங்கப்பூர் | - | 1 | - | 1 |
| வியட்நாம் | - | 1 | - | 1 |
| ஆர்மேனியா | - | - | 6 | 6 |
| சீனா தைபே | - | - | 4 | 4 |
| அயர்லாந்து | - | - | 2 | 2 |
| நைஜீரியா | - | - | 2 | 2 |
| ஆப்கானிஸ்தான் | - | - | 1 | 1 |
| பாஹாமஸ் | - | - | 1 | 1 |
| எகிப்து | - | - | 1 | 1 |
| இஸ்ரேல் | - | - | 1 | 1 |
| மொறோக்கோ | - | - | 1 | 1 |
| மோல்டோவா | - | - | 1 | 1 |
| மொறிரியஸ் | - | - | 1 | 1 |
| ருகோ | - | - | 1 | 1 |
| வெனிசூலா | - | - | 1 | 1 |

## திருமண வாழ்க்கை 2 ஆண்டில் கசந்தது; மனைவியைப் பிரிகிறார் 'வேகப்புயல்' லீ



பிரபல அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிரெட் லீ தனது மனைவியைப் பிரிகிறார்.

உலகின் அதிவேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவராக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் பிரெட் லீ விளங்கி வருகின்றார்.

எதிர்வருகின்ற முதலாம் திகதி பங்களாதேஷுக்கு எதிராக ஆரம்பமாகும் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த பிரெட் லீ மறுநாள் திடீரென அணியிலிருந்து விலகினார்.

விலகுவதற்குத் தனிப்பட்ட காரணம் என்று விளக்கமளித்தார். ஆனால் மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுக் குடும்ப வாழ்க்கை முடிபுக்கு வந்ததே பிரெட் லீ விலகளுக்கான காரணம் என்று உடனடியாக ஊடகங்களில் செய்திகள் வந்தன.

***மனைவியைப் பிரிகின்றார்***

இந்த நிலையில் இந்தத் தகவலை பிரெட் லீ நேற்று முன்தினம் உறுதிப்படுத்தினார். அவுஸ்திரேலியக் கிரிக்கெட் சபை மூலம் அவர் வெளியிட்ட அறிக்கையில், எங்களது தனிப்பட்ட குடும்ப விவகாரம் 'எப்படி இவ்வளவு சீக்கிரம் வெளி வந்தது என்பது ஆச்சரியமளிக்கின்றது.

ஆனால் ஊடகங்களில் வந்த தகவல் உண்மை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது மனைவி லிஸ் கெம்ப்பை விட்டுப் பிரிவது என்று முடிபு செய்திருக்கின்றேன். இது எனது தனிப்பட்ட விடயம்.

உணர்வு பூர்வமான குடும்ப விவகாரம். எனவே அதில் பாதிப்பு ஏற்படாத வகையில் நடந்து கொள்ளும்படி உங்களை (ஊடகங்கள்) கேட்டுக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

***இரண்டு ஆண்டு பந்தம்***

31 வயதான பிரெட் லீ கடந்த 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் லிஸ் கெம்ப்பை திருமணம் செய்து கொண்டார். 31 வயதான கெம்ப் குழந்தை நல மருத்துவ நிபுணர் ஆவார்.

இவர்களுக்கு பிரிஸ்டான் என்ற ஆண் குழந்தையுள்ளது. கடந்த சில மாதங்களாகவே லீ-கெம்ப் இடையே சுமுகமான உறவு இல்லை. கருத்து வேறுபாடு அதிகரித்த நிலையில் அவர்களது திருமண வாழ்க்கை இரண்டு ஆண்டுகளில் முறிந்திருக்கின்றது. (05)

## சம்பியன் தொடரைப் புறக்கணித்தது தென்னாபிரிக்கா

(இஸ்லாமாபாத்)

ஐ.சி.சி.சம்பியன் தொடர் பாகிஸ்தானில் செப்ரெம்பர் 12 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந் நிலையில் பாகிஸ்தானில் நிலவிவரும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாகத் தொடரை வேறு இடத்தில் நடத்துமாறு தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் ஐ.சி. சிக்குக் கோரிக்கை விடுத்தன.

இவர்களின் கோரிக்கையை ஏற்காத ஐ.சி.சி. திட்டமிட்டபடி சம்பியன் தொடர் பாகிஸ்தானில் நடைபெறும் என அறிவித்தது. பாகிஸ்தானில் தமது வீரர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலையில் உறுதியாக இருந்த தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணி இந்தத் தொடரிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளது. இதனையடுத்து அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளும் தங்கள் முடிபை விரைவில் அறிவிக்கவுள்ளதாக தெரிய வருகிறது. (05)

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்







வவுனியாவில் நடைபெற்றுவரும் வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டத்தில் சம்பியனான மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரையும், 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியினரையும் முதல் இரு படங்களிலும் உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வவுனியா நகரசபைச் செயலாளர் ரி.ஜெயராஜா வெள்ளிக்கிண்ணத்தை வழங்குவதையும் அருகில் வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலனையும் படங்களில் காணலாம். (படங்கள்: வவுனியா செய்தியாளர்)

## துணுக்காய்,உயிலங்...

தலைமையகம் கூறியிருக்கின்றது.

துணுக்காய் நகரப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியதையடுத்து இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தலைமையகத்தின் முக்கிய இராணுவ அதிகாரிகளுடன் நேற்று வவுனியாவில் உள்ள வன்னிப் பிராந்திய ஆயுதப் படைகளின் தலைமையகத்திற்கு விஜயம் செய்து முக்கிய களமுனை இராணுவ தளபதிகளுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்திருக்கின்றது:

துணுக்காய் நகரத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றியுள்ளமையானது வன்னிப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான வெற்றி நிலையாகும் என்றும் இராணுவ தலைமையகம் கூறியிருக்கின்றது.

எனினும் துணுக்காய் நகரப் பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து உடனடியாக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை பாலமோட்டை குஞ்சுக்குளம் உட்பட்ட வன்னிக் கள முனைகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நேற்றைய நடவடிக்கைகளில் 25 விடுதலைப் புலிகளும் 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

மேலும் 8 இராணுவத்தினர் காயமடைந்திருப்பதாகவும் இராணுவம் கூறியிருக்கீன்றது. (ச-5)

## விசுவமடு...

இடத்திலேயே கொல்லப்பட்டார்.சி.பெருமாள் (வயது 64) மற்றும் நான்கு பிள்ளைகளின் தாயான சி.ரமணி (வயது 32) ஆகியோர் காயமடைந்தனர் என வன்னித் தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை முல்லைத்தீவு விஸ்வமடுவி லுள்ள புலிகளின் முக்கிய தளத்தின் மீது நேற்று காலை விமானப் படையின் ஜெட் ரக விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

விஸ்வமடு வடக்கே ஐந்து கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள புலிகளின் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் யுத்த தளபாடங்கள் விநியோகிக்கும் முக்கிய தளத்தின் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## 17 வயதுப் பிரிவு உதைபந்...

சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கணக்கில் மன்னார் சென்.சேவியர் அணியை வீழ்த்தி சம்பியனாது.

இப்போட்டியில் தோல்வியடைந்த மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

17 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டத்தில் மூன்றாமிடத்தை தெரிவு செய்வதற்கான போட்டியில் வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியால்ய அணி,மன்னார் சித்தி விநாயகர் அணியை வீழ்த்தி மூன்றாமிடத்தைப் பெற்றது.

இதேவேளை 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் சென்.சேவியர் ஆண்கள் பாடசாலை அணி சம்பியனானது. இப்போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியை எதிர்த்து ஆடிய மன்னார் சென்.சேவியர் பாடசாலை அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

இதில் தோல்வியடைந்த அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பிடித்தது.

இப்பிரிவில் நடைபெற்ற மூன்றாமிடத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வவுனியா நெடுங்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தை எதிர்த்து ஆடிய மன்னார் சென். லூசியஸ் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

உதைபந்தாட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் எதிர்வரும் 6,7 மற்றும் 8 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது என வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார். (ச-5)

## வவுனியாவில்...

சூட்டாதரவுடன் முன் நகர்வினையும் ஊடுருவல் நடவடிக்கையினையும் மேற்கொண்டனர்.

இதற்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர எதிர்த்தாக்குதலை நடத்தினர். இத்தாக்குத லில் 5 படையினர் கொல்லப்பட்டனர். 7 படை யினர் காயமடைந்தனர்.

படையினரின் சடலம் உள்ளிட்ட படைப் பொருட்கள் என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. நேற்று முன்தினமிரவு வரை படையினரின் முன் நகர்வுக்கு எதிரான முறியடிப்புத் தாக்குதல் தொடர்ந்தது என புலிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## வன்னியில் இடம்பெறும்...

இதேவேளை மோதல்கள் காரணமாக வன்னியில் இடம் பெயர்ந்துள்ள சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மக்களுக்கு தாம் நிவாரண உணவுகளை வழங்கி வருவதாக ஐ.நாவின் உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் இடம் பெற்றுவரும் மோதல்களால் உருவாகியுள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக அங்கு ஐ.நா முகவர் நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுவந்த பல மனிதாபிமான புனருத்தாரண செயற்றிட்டங்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 38 செயற்றிட்டங்களும் மன்னார் மாவட்டங்களில் 6 செயற்றிட்டங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 25 செயற்றிட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நாவின் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

வன்னியில் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலை காரணமாக கிளிநொச்சியில் 51ஆயிரத்து 74 பேரும் மன்னாரில் 24 ஆயிரத்து 110 பேரும் முல்லைத்தீவில் 41 ஆயிரத்து 84 பேரும் இடம்பெயர்ந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## தேவாலயம்...

அமைந்துள்ள புனித பிலிப்ஸ் கிறிஸ்தவ தேவாலய வளவினுள் இருந்து சுமார் 19 டெட்டோனேட்டர்கள், 23 ஆளிகள் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்கொலைக்குண்டு அங்கியொன்றினை பொருத்துவதற்காக இவை கொண்டு வந்து மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என அவர்கள் சந்தேகம் வெளியிட்டிருக்கின்றனர்.

இது தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இதேவேளை மத்திய மலைநகரமான கண்டியின் புறநகர்ப்பு பகுதியான பலகொல்லவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவொன்று வீடொன்றின் அருகிலிருந்த மணல்மேடு ஒன்றிலிருந்து சுமார் ஒரு கிலோ எடையுள்ள வெடிகுண்டு ஒன்றைக் கண்டெடுத்துள்ளது.

அக்குண்டு செயலிழக்கம் செய்யப்பட்டுள்ளது. (ச)

## பயங்கரவாதத்தை...

வட மத்திய மாகாண சபைத் தேர்தல்களில் மக்கள் அரசாங்கத்துக்கே வாக்களிப்பார்கள் என நிமால் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் வன்முறைகள் மற்றும் மோசடிகள் மூலம் இந்தத் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றம் சாட்டியிருந்தனர்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துரைத்த சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா மக்கள் ஆதரவு தமக்கு இருப்பதால் தேர்தல் வன்முறைகளிலேயோ மோசடிகளிலேயோ ஈடுபடவேண்டிய தேவை இல்லை எனக் கூறினார்.

தேர்தல் நடைபெறும் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருக்கின்றார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களைக் கொண்டு அநுராதபுரத்தில் வன்முறைகளை கட்டவிழ்த்துவிட ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டிருப்பதாகவும் சபை முதல்வர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை கிழக்குத் தேர்தல்களில் இடம்பெற்றதைப் போன்று வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களிலும் வாக்கு மோசடிகள் இடம்பெற அனுமதிக்கப்போவதில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கூறினார். (ச-5)

## வலைபந்தாட்டப் போட்...

வென்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

இதில் தோல்வியடைந்த வவுனியா றம்பைக்குளம் பெண்கள் பாடசாலை இரண்டாமிடத்தைப் பிடித்தது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி பெற்றது.

17 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதின.

இப்போட்டியில் வெற்றி பெற்ற மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணி சம்பியனானதுடன் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்பிரிவில் மூன்றாமிடத்தை சைவப்பிர காச மகளிர் கல்லூரி அணி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக் கான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்தாடிய சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது. இதன் மூலம் இரண்டாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி பெற்றது. அப்பிரிவில் மூன்றாமிடத்தை மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

வலைபந்தாட்டத்தில் முதல் மூன்று இடத்தைப் பெற்ற அணிகள் எதிர்வரும் 6,7 மற்றும் 8 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய மட்டப்போட்டிகளுக்கு தகுதி பெற்றதாக வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார். (ச-5)

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை இராசேந்திரம்



கொக்குவில் மேற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும்110/1, சிவன்பண்ணை 'வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசேந்திரம் நேற்று (22.08.08) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் இராசரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கலெட்சுமியின் அன்புக் கணவரும், மகாதேவர், மகேஸ்வரி, பரமேஸ்வரி, இரட்ணசபாபதி, சுப்பிரமணியம், சந்திரசேகரம், காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை மற்றும் மகேஸ்வரன், இந்திராணி (கனடா) ஆகியோரின் சகோதரரும்,

சுரேஸ்குமார், சுபாசினி, ஜெயக்குமார், பாலகுமார் (மகராசி நகை மாடம்), லதாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி, தசக்கிரிபன் (நக்கீரன், வேலணை), கலைரஜனி, சதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், தனலெட்சுமி, காலஞ்சென்றவர்களான உலகநாதன், ஏகாம்பரம், பத்மநாதன், உமாதேவி ஆகியோரின் மைத்துனரும், நிகேதன், கேனுஜன், கபிநயா, நிலக்சன், கம்ஷிகா, தனுஸ்குமார், மதுஸ்குமார், மதுரா, அம்சவி, ஆருஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.08.2008) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**110/1, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல், குடும்பத்தினர்**

(1622)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.